
மேதாவி எழுதிய
மர்ம நாவல்

# சூதாடும் சுந்தரி



COMICS
PDF
TIMES

# சூதாடும் சுந்தரி

COMICS PDF TIMES

மர்ம நாவல்

ஆசிரியர் :

"மேதாவி"

NOTFORSALE
FANMADEONLY

மாலா பதிப்பகம்

2, கபூர் சாஹிப் 2-வது தெரு,

சென்னை-14.

முதற் பதிப்பு: ஆகஸ்ட் 1970.

பதிப்புரிமை பெற்றது

வயது வந்தவர்களுக்கு மட்டும்

கதையில் வரும் சம்பவங்கள்
பெயர்கள் யாவும் கற்பனையே

விலை 50 காசு

---

சத்யா அச்சகம், சென்னை-14.

# 1

அரசியலிலே அப்பாவிகளை பகடைக்காய்களாக வைத்து சூதாட்டம் நடத்தும் பெரிய தலைவர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய சூதாட்டப் போக்கினால் சாம்ராஜ்யங்களே கவிழ்கின்றன.

மேல் நாட்டு நாகரீகத்தைத் தழுவி நிகழும் உல்லாஸ 'கிளப்' களின் அதிபர்கள் தங்கள் வர்த்தக வாய்ப்பைப் பெருக்க பேரழகு நிறைந்த சுந்தரிகளைப் பிடித்து, சீட்டு மேஜை அருகே உட்கார வைக்கிறார்கள். அந்த அழகு யமன்களின் முன்னால், அறிவு மயங்கி ஏராளமான பேர் கைப் பொருள் இழக்கிறார்கள். அந்த சூதாடும் சுந்தரிகளால் அந்த கிளப் நிர்வாகிகள் கொழுக்கிறார்கள் என்பது உண்மைதான் என்றாலும் அதனால், அந்த சுந்தரிகளுக்கு எந்த விதத்திலும் பயன் இல்லை. ஏதோ அவர்களுடைய அன்றாடச் செலவுகளுக்கும் ஆடம்பரச் செலவுகளுக்கும் சில வெள்ளி ரூபாய்கள் கிடைக்கின்றனவே தவிர. அதனால் அவர்களுக்கு நிரந்தரமான ஆதாயமோ, செல்வக் குமிப்போ ஏற்படுவதில்லை.

ஆனால் வாழ்க்கையிலே மிகத் தந்திரமான செயல்களை கையாண்டு வாழ்க்கைச் சூதாட்

டைக் நடத்தும் அபாயகரமான சுந்தரிகள் இந்தக் காலத்தில் ஏராளமாக இருக்கிறார்கள்.

அம்மா திரி சூதாடும் சுந்தரிகளால் எவ்வளவோ கொலைகள் நடக்கின்றன. எவ்வளவோ மோசடிகள் நடைபெறுகின்றன. எத்தனையோ குடும்பங்கள் சிதைந்து சின்னாபின்னமாகின்றன.

COMICS PDF TIMES

மனோ அழுத்தமும் கிராதகத் தன்மையும் ஒருங்கே அமைந்த வாழ்க்கைச் சூதாட்ட சுந்தரிகள் ஈவிரக்கமற்றவர்கள். பந்தபாசம் அற்றவர்கள். அவர்கள் நினைத்தால் எத்தகைய கிராதகச் செயலுக்கும் ஈடுபடத் தயங்க மாட்டார்கள். தங்கள் குழந்தை குட்டிகளையே தங்கள் லட்சியத்திற்கு கொடுமைப் படுத்த தயங்க மாட்டார்கள் — அவசியம் ஏற்பட்டால் பலி கொடுக்கவும் தயங்கமாட்டார்கள்.

இப்படிப்பட்ட மகாசக்தி படைத்தவள் தான் சாவித்திரிதேவி. அவளது சாகசச் செயல்களின் வேகத்தில் ஒரு சாம்ராஜ்யம் போன்றபெருங் குடும்பமே நிலை தடுமாறி நின்றது. தனதுமகனின் குறுக்கீடோ, நண்பர்களின் இடையூறோ அவளை சிறிதும் பின்னடையச் செய்யவே இல்லை.

இந்தச் சூழ்நிலையில் தான் பயங்கரமான அந்த சூதாடும் சுந்தரியின் வரலாறு ஆரம்பமாகிறது.

# 2

பாரிஸ்டர் சுந்தரவடிவேலின் ஆபீசில் வேலை பார்த்த பரிமளாவும், அதே ஆபீஸில் டைப்பிஸ்டாக இருந்த நிர்மலாவும் கருணாலயம் என்ற பழங்கால நாடகக் கலை ஓர் ஒருவரது வீட்டு மாடியில் அறை எடுத்துக் கொண்டு வசித்து வந்தார்கள். இருவரும் ஒருவர் மீது ஒருவர் மிகுந்த அன்பும், அக்கறையும் கொண்டவர்கள். பரிமளா அறியாப் பருவத்திலேயே தந்தையை இழந்து விட்டாள்.

தனது தாயார் முகத்தையே பரிமளா கண்டதில்லை. அவளை அன்போடு வளர்த்த பெண்மணியும் இறந்து விடவே, பரிமளா படதா பாடு பட்டு, பாரிஸ்டரின் ஆபீஸில் வேலையைத் தேடிக் கொண்டாள்.

பரிமளாவை சிறிது காலமாக பாலசுந்தர் என்ற இளைஞன் நிழல் போல் தொடருவதை தோழியான நிர்மலாவின் மூலம் அறிந்திருந்தாள்.

அதை அவள் வெகுவாக வெறுப்பவள். இதைப் போல நிர்மலாவிற்கு வெறுப்பளிக்கும் விஷயம் ஒன்று உண்டுஅது நாடகக் கலைஞன் கருணாலயம் நாள் தோறும் இரவு முழுவதும் தனதுபிடிவில், ''பிருந்தாவனத்தில் கண்ணன்வளர்த்த அந்த நாளும்வந்திடாதோ'' என்ற இசையை இசைப்பதுதான்.

அன்று காலை வழக்கம் போல பரிமளா கருணாலயத்திற்கு காப்பி எடுத்துச் சென்ற போது, அவன் தன் கதையை அவளிடம் கூறினான்.

“நான் நாடகங்கள் நடத்திய அந்தக் காலத்தில் சுகுமாரி என்ற ஒரு பெண் என் நாடகங்களில் நடத்தி வந்தாள்.

அவள்தான் தன்னுடைய இனிமையான குரலில் “பிருந்தாவனத்தில் கண்ணன் வளர்ந்த அந்த நாளும் வந்திடாதோ” என்ற பாட்டை இசைத்து என் ஆன்மாவையே அடிமை கொண்டு விட்டாள். அவளது இசையில் மயங்கி நான் அவளைத் திருமணம் செய்து கொண்டேன். என்று பரவசத்தோடு கூறி நிறுத்தினான் கருணாலயம்.

”அப்படியா?” என்று ஆச்சரியத்தோடு கேட்ட பரிமளா, “இப்பொழுது சுகுமாரி எங்கே? இறந்து விட்டாளா?“ என்று கேட்டாள்.

“இறந்திருந்தால் தான் பரவாயில்லையே என்று வேதனையோடு கூறிய கருணாலயம் திருமணமாகி சில காலம் கழித்து அவள் என்னை ஏமாற்றி விட்டு எங்கோ சென்று விட்டாள்! என்றான்.

அன்று தங்களது வேலைகளை முடித்துக் கொண்டு தோழிகள் இருவரும் ஆபீஸிற்கு செல்லும் பொழுது சிறிது கால தாமதமாகி விட்டது.

# 3

ஆபீசிற்குச் சென்ற பரிமளாவை பாரிஸ்டர் அழைத்து, ஒரு தஸ்தாவேஜை கொடுத்து மலைப் பாக்கம் மத்திய சிறைச் சாலைக்கு அதை எடுத்துச் சென்று, அங்கு கைதியாக இருக்கும் கற்பக வல்லியிடம் கையெழுத்து வாங்கிக் கொண்டு வருமாறு கட்டளையிட்டார்.

அவருடைய கட்டளைப் படி பரிமளா அந்த தஸ்தாவேஜை எடுத்துக் கொண்டு அந்த ஆபீசின் புராதன, வயோதிக காரில் ஏறி மலை பாக்கத்தை நோக்கி கிளம்பினாள்.

அவள் சிறிது தூரம் சென்ற பிறகு, அவளைத் தினந்தோறும் பின் தொடரும் இளைஞனான பாலசந்தர் எதிர் புறத்திலிருந்து ஒரு காரைச் செலுத்திக் கொண்டு வருவதைப் பார்த்தாள்.

பரிமளா சிந்தனை வேகத்தில் காரை வேக மாகச் செலுத்திக் கொண்டிருந்ததால் என்ன முயன்றும் காரின் வேகத்தை அவளால் கட்டுப் படுத்த முடியவில்லை. இரு கார்களும் மோதிக்கொண்டு நின்று விட்டன.

பரிமளா ஆத்திரத்தோடு கத்திய போதிலும், அவன் சாந்தமாகத் தனது காரை ஸ்டார்ட் செய்து இரு கார்களையும் பிரித்து விட்டான்.

"நீங்கள் என்னைப் பல நாட்களாகப் பின் தொடர்கிறீர்கள்! என்று ஆத்திரத்தோடு கூறிய பரிமளா" இப்பொழுது என்னுடன் பேச வேண்டும் என்பதற்காகவே வேண்டு மென்று என் காரின் மீது உங்கள் காரை மோதி, விபத்து ஏற்பட்டது போல் பாவனை செய்திருக்கிறீர்கள்! என்று சீறினாள்.

"உன் குற்றச் சாட்டு அர்த்தமற்றது! என்று நிதானமான குரலில் கூறிய பாலச் சந்தர், உன்னிடம் பேச வேண்டுமென்பதற் காக நான் உன் கார் மீது என் காரை மோத வில்லை. நீதான் கற்பனை உலகில் சஞ்சரித் துக் கொண்டு கடும் வேகத்தில் காரை ஓட்டி வந்து என் கார் மீது மோதி விட்டாய், பர வாயில்லை, பரவாயில்லை; என் காரின் விளக் குக் கண்ணாடி தான் உடைந்து விட்டது. உன் காருக்கு எந்த வித சேதமும் ஏற்படவில்லை உனக்கு பாரிஸ்டர் சுந்தர வடிவேலுவிடமி ருந்து எந்தவிதமான திட்டும் கிடைக்காது." என்றான் புன்னகையோடு.

பரிமளா அவன் பேச்சைக் கேட்டு முதலில் ஆத்திரமடைந்த போதிலும், அவனது பரந்த எண்ணத்தைக் கண்டு ஆச்சரியமுற்றாள்.

"தவறு என்னுடையது தான், பாலச்சந்தர் உண்மையில் என் மனம் கற்பனையில் தான் மூழ்கி இருந்தது. அதனால் என்னையறியாமல் நான் காரைக் கடும் வேகத்தில் ஓட்டி வந்தி ருக்கிறேன்! "என்று மன்னிப்புக் கோரும் குர லில் கூறினாள் பரிமளா.

"சரி நீ இப்பொழுது எங்கே போகிறாய்?" என்று கேட்டான் பாலச்சந்தர்.

"மலைப்பாக்கம் மத்திய சிறைச் சாலைக்கு" என்று பரிமளா கூறியதும், பாலச்சந்தர் அளவு கடந்த வியப்படைந்தான்.

அவனது திகைப்பு அடங்கும் முன்பே பரிமளா தனது காரைக் கிளப்பிக் கொண்டு சென்று விட்டாள்.

COMICS PDF TIMES

# 4

மலைப்பாக்கத்திலே ஒரு பிரமாண்டமான இலுப்பைத் தோப்பிற்குப் பின்புறம் அந்தப் பெண்கள் சிறைச்சாலை அமைக்கப்பட்டிருந்தது.

சிறைச் சாலையை அடைந்த பரிமளா, ஜெயிலர் கல்யாண சுந்தரத்திடம் கற்பக வல்லி என்ற பெண் கைதியிடம் கையெழுத்து வாங்க வேண்டுமென்று தெரிவித்தாள்.

"கற்பகவல்லிக்கு உடல்நிலை சரியில்லை, பரிமளா!" என்று கூறிய கல்யாண சுந்தரம், "நீ அவசரமாக அவளைப் பார்க்க வேண்டுமென்றால், அவளை சிறை ஆஸ்பத்திரியில் நீ சந்திக்கலாம்" என்றார்.

"எனக்கு சிறை ஆஸ்பத்திரி எங்கே இருக்கிறதென்று எனக்குத் தெரியாதே? என்றாள் பரிமளா.

நான் உன்னை அழைத்துச் செல்கிறேன். என்னுடன் வா "என்று கூறியபடி நடந்தார் கல்யாண சுந்தரம்,

பரிமளா அவரைப் பின் தொடர்ந்தாள். அந்த ஜெயில் உள்ளே மிக விசாலமாக உள்ளது.

பெண் கைதிகளெல்லாம் உடற் பயிற்சி செய்து கொண்டிருந்தனர். அதையே பரிதாப உணர்ச்சியோடு பார்த்தபடி பரிமளா சென்றாள்

கையெழுத்து வாங்கிக் கொண்டு அவள் திரும்பி வரும்பொழுதும் அந்தப் பெண் கைதிகள் உடற்பயிற்சிகள் செய்து கொண்டிருந்தனர்

பரிமளாவின் உள்ளத்தை அந்தக்கூட்டத்தின் கடைசிப் பகுதியில் வந்துக் கொண்டிருந்த ஒரு கம்பீரமான பெண்மணியின் உருவம் வெகுவாகக் கவர்ந்தது. அந்தப் பெண்மணியின் கருணை வழியும் கண்களும், தெய்வீகக்களை ததும்பும் முகமும், நிமிர்ந்த தலையும் அவளை அந்தக் கூட்டத்திலிருந்தே பிரித்துக் காட்டின.

அந்தப் பெண்மணி பரிமளாவைப்பார்த்துவிட்டுத் தன் வழியே சென்றாள். அந்தப் பார்வைப் பரிமளாவை என்னவோ செய்தது.

ஜெயிலாவை அறையை அடைந்ததும், பரி மளா அந்தக் கூட்டத்தின் கடைசியில் பார்த் தோமே ஒரு பெண்மணி—அவள்என்ன குற் றம் செய்திருக்கிறுள்.? என்று கேட்டாள்.

கல்யாண சுந்தரம் ரெக்கார்டுபுத்தகத்தை அவளிடம் காட்டினுர்' பரிமளாஅதில் கண்ட விவரம் இதுதான்,

"காவேரி என்ற இந்தப் பெண் ஒருபெண் மணி நடத்தி வந்த விடுதியிலே தனது கணவன் என்று கூறப்பட்ட ஒரு இளைஞ ஞேடு வசித்துவந்தாள். அவன் திடீரென்று அவளை விட்டுவிட்டு எங்கோ சென்று விட் டான்.

அந்த விடுதியின் சொந்தக் காரியான விஜயகுமாரி ஒரு பணக்கார விதவை. அதோடு சிறிது புத்தி சுவாதீனம் இழந் தவள்.

அவள் தனது ஜாகையிலேயே ஏராள மான நகைகளையும், பணத்தையும் வைத் திருந்தாள். கணவனுல் கைவிடப்பட்ட காவேரி தனக்கு வேலை வேண்டும் என்று ஒரு தினப் பத்திரிகையில் விளம்பரம் செய்திருந்தாள்.

அதைக் கண்ணுற்ற ஒரு பணக்காரி தனது காரியதரிசியாக அமர்த்திக் கொள்வதற் காக காவேரியைப் பார்க்க விடுதிக்கு வந் தாள்.

வீட்டுக்குள் நுழைந்தவுடன் முன்ஹாலில் எதிர்புறமிருந்த அறைக்குள் விஜயகுமாரி தலைகுப்புற விழுந்து கிடப்பதைக் கண்டு பதறிப் போய் போலீசாரை அழைத்து வந்தாள்.

விஜயகுமாரியின் பீரோவிலிருந்த நகைகள் கீழே சிதறிக் கிடந்தன.

காவேரி சற்று முன் தான் வெளியே சென்றாள் என்று தகவல் அறிந்த போலிசார் காவேரியின் அறையைச் சோதனையிட்டனர்.

காவேரியின் பெட்டியில், விஜயகுமாரிக்கு சொந்தமான சில நகைகளும், "ஆர்சனிக் என்ற ஆலகால விஷமும் காணப்பட்டன" விஜயகுமாரி "ஆர்சனிக்"கினால் தான் கொல்லப் பட்டிருந்தாள். இதனால் காவேரி கைது செய்யப்பட்டாள்.

எதிர் தரப்பு வாதத்தில், விஜயகுமாரி புத்தி சுவாதீனமற்றவள் என்றும், அவள் அடிக்கடி தற்கொலை செய்து கொள்ளப் போவதாகப் புலம்பி வந்தாள் என்றும் கூறப்பட்டது.

காவேரியை எவ்வளவோ வற்புறுத்தியும் அவள் தன் கணவன் யார் என்பதைப் பற்றியோ தன்னைப்பற்றியோ ஒரு விதத் தகவலும் தெரிவிக்க மறுத்து விட்டாள், அதோடு எதிர் வழக்காடவும் விருப்பமின்றி காணப்பட்டாள்.

அவனுக்கு மரண தண்டனை என்று தீர்ப்பு வழங்கப்பட்டது. ஆனால் அது கடைசியில் மாற்றப் பட்டு ஆயுள் தண்டனையாக விதிக்கப்பட்டது.

அந்த ரெக்கார்டு புத்தகத்தைப் படித்து முடித்த பரிமளா, "அவள் ஒரு கொலைகாரி என்பன நம்பவில்லை" என்று கூறிவிட்டு, தூக்கு தண்டனை ஏன் ஆயுள் தண்டனையாக மாற்றப்படவில்லையா? என்று கேட்டாள்.

காவேரி அந்தச் சமயத்தில் கர்ப்பமாக இருந்ததால்தான் தூக்கு தண்டனை ஆயுள் தண்டனையாக மாற்றப் பட்டது. அவளுக்குக் குழந்தைப் பிறந்தவுடன், அதை அவளுடன் தோழி ஒருத்தி எடுத்துக் கொண்டு போய் வளர்த்தாள்" என்று கூறிய கல்யாணசுந்தரம், "சிறையில் இருக்கும் பொழுது ஒரு நர்சின் அஜாக்கிரதையினால் அக்குழந்தையின் கையில் சூட்டுக் காயம் ஏற்பட்டு தழும்பு ஏற்பட்டு விட்டது. எனக்கு ஒரு குழந்தை இருந்து, இறந்து விட்டது. அந்தக் குழந்தையின் நினைவாக காவேரியின் குழந்தைக்கு பரிமளா என்றுபெயர் வைத்தேன்!" என்றார்

இதைக் கேட்டவுடன் தனது கையிலே இருந்த பெரிய தழும்பைப் பார்த்துக்கொண்ட பரிமளாவுக்கு தலை சுற்றியது. உலகமே தலைகீழாகச் சுற்றுவது போன்ற ஒரு பிரமை ஏற்பட்டது.

தான் மயங்கி விழ்ந்து விடக்கூடாது என்றி பரிமளா கடவுளைப் பிரார்த்தித்து கொண்டார்.

# 5

பரிமளா தன் பிறப்பைப் பற்றிய பயங்கர மான உண்மையை அறிந்தவுடன் சிறைச் சாலை யின் உள்ளே தன் தாயார் இருந்த இடத்திற்கு ஓட எழுந்து விட்டாள்.

பிறகு தன்னை சுதாகரித்துக் கொண்டு' ஜெயிலரிடம் மேற் கொண்டு அதைப் பற்றி விசாரிக்க எண்ணி, "அந்தக் குழந்தை என்ன ஆயிற்று? என்று கேட்டாள்.

"அது இறந்து விட்டதென்று நான் நினைக்கிறேன். ஆனால், அது சிறையில் உயிரு டன் இருக்கும் பொழுதே அது இறந்துவிட் டது என்று பத்திரிகையில் தவறான செய்தி பிர சுரிக்கப்பட்டது" என்றுதெரிவித்தார் கல்யாண சுந்தரம்.

ஜெயிலரிடம் விடை பெற்றுக் கொண்ட பரிமளா, தனது கார் இருந்த இடத்தை நோக்கி நடந்தாள்,

இந்த மர்மமான விவரங்களை அறிந்தபின் பரிமளா சஞ்சலமடைந்த மனத்துடன் காரை

மிகவும் தாறுமாருக ஓட்டிச் செல்லு வதைப் பார்த்து விட்டு, அவளைத் தொடர்ந்து வந்த பாலசந்தர் அவளைத்தானே ஆபீஸில்கொணடு விடுவதாகக் கூறி அவளது காரில்ஏறிச்செலுத் தினுன்.

“எதனுல் நீ இப்படி தடுமாற்ற மடைந்து காணப் படுகிருய்?” என்று அக்கறையோடு விசாரித்தான் பாலசந்தர்.

“பெண் கைதிகளைக் கண்டது தான் இதற் குக் காரணம்” என்று மழுப்பிளுள் பரிமளா.

பாலசந்தர் பிறகு அவளை வற்புறுத்தி ஒன் றும் கேட்கவில்லை.

சிறிது நேரத்தில் பாரிஸ்டர் சுந்தரவடி வேலின் ஆபீஸை அடைந்தனர்,

உங்களுக்கு நன்றி! என்று கூறிய பரிமளா, காரை விட்டு இறங்கினுள்.

பரிமளா ஆபீசிற்குச் சென்ற பொழுது, அங்கு அவளைப் பார்க்க விரும்பி ஜமீன்தாரிணி சாவித்திரி தேவியும் அவரது மகன் பாலாஜி யும் வந்திருக்கிருர்களென்று அறிந்தாள்,

உள்ளே நுழைந்த பரிமளாவை ஒரு கணம் கண்ணிமைக்காமல் பார்த்த பாரிஸ்டர் சுந்தர வடிவேல், “பரிமளா! இவர் தான் சோலைமலை ஜமீன்தாரணி சாவித்திரி தேவி. அவர் இளைய ஜமீன் தார் பாலாஜி!” என்று அறிமுகப் படுத் தினுர்.

பரிமளா வணக்கம் தெரிவித்தாள் பாலாஜி தான் அவளுக்குபதில் வணக்கம் தெரிவித்தான், ஆனால் சாவித்திரிதேவி பரிமளாவை ஒரு அலட்சிய பாவத்தோடு பார்த்தாள்.

பரிமளா அங்கிருந்து வீட்டிற்குச் சென்றதும். உடை உடுத்திக் கொண்டு, குற்றவாளிகளைப் பற்றியும், அவர்களுக்கு சாட்சிகளாக ஆஜரானவர்களைப் பற்றியும் குறிப்பு எழுதி வைத்திருந்த ஒரு ஆபீசிற்குச் சென்றாள்,

அந்த ஆபீசில் அவளுக்கு நல்ல பழக்கம் இருந்ததால் தனக்குத் தேவையான ஒரு பைண்ட் வால்யூமை எடுத்துப் படித்தாள்.

காவேரியின் வழக்கில் எதிரி தரப்பு சாட்சியாக வந்தவள் சூரியகலா என்று படித்ததும், தனது வளர்ப்புத் தாயின் பெயரும் சூரியகலா தான் என்பது அவள் நினைவிற்கு வந்தது.

சிறையில் பார்த்த பெண்மணி வேறு யாருமல்ல தன் தாயார் தான் என்று சந்தேகமற தெரிந்து கொண்ட பரிமளா, தனது தாய் நிரபராதி என்பதை நிரூபித்து விட வேண்டும் என்று முடிவு கட்டிக் கொண்டாள்.

அந்த முடிவை எப்படிப் பட்டாவது செயல் படுத்தி விட வேண்டும் என்று சங்கல்பம் செய்து கொண்ட பரிமளா, வீடு வந்து சேர்ந்தாள்.

# 6

பரிமளா தனது ஜாகைக்குத் திரும்பிச் சென்று கொண்டிருக்கையில், ஒரு லாரி மிகுந்த வேகத்துடன் அவளை நோக்கி வந்தது.

மயிரிழையில் தப்பிய பரிமளாவின் புடவைக் கரை மட்டும் அதில் அகப்பட்டுக் கிழிந்துபோய் அந்த லாரியிலேயே சிக்கிக் கொண்டு போய் விட்டது.

பரிமளாவின் ஜாகையிலிருந்து திடீரென்று பாலசந்தர் வெளிப்பட்டு அவளது மனோநிலைக் கான காரணத்தை மறுபடியும் கேட்டான்.

பரிமளா அவன் கேட்டதற்கு பதிலளிக் காமலேயே உள்ளே சென்று விட்டாள். அவளையே சிறிது நேரம் பார்த்துக் கொண் டிருந்த பாலசந்தர் யோசனையோடு நடந்தான்.

"உனக்கு ஒரு பிஸ்கெட் பெட்டி வந்திருக் கிறது, பரிமளா!" என்று கூறினாள் நிர்மலா.

"எனக்கா!" என்று ஆச்சரியத்தோடு கேட்ட பரிமளா மேஜைமீது இருந்த பெட்டியை நெருங்கினாள்.

ஒரு அழகிய பிஸ்கைட் பெட்டியும், அத னருகில் ஒரு சிறிய கடிதமும இருந்தன

அந்தக் கடிதத்தில் ஒரே ஒரு வரிதான் எழுதி இருந்தது.

## "உன்னையே கனவில் கண்டு களிப்புறும் காளையிடமிருந்து

"அப்படியானால், இது உன்னைப் பின் தொடரும் அந்த பாலசந்தரிடமிருந்து தான் வந்திருக்க வேண்டும்!" என்று அழுத்த புஷ்டி யோடு கூறினாள் நிர்மலா.

"நீ அப்படி நினைக்கிறாயோ?" என்று கேட்ட பரிமளா, "ஆம்! அது பாலசந்தரின் வேலையாகத்தான் இருக்கும். நாளை காலையில் நான் பாலசந்தரின் வீட்டிற்குச் சென்று கடு மையாக எச்சரிக்கப் போகிறேன்!" என்று கூறி விட்டு படுக்கைக்குச் சென்றாள்.

படுக்கையில் படுத்து வெகுநேரம் வரை அவளுக்கு உறக்கமே வரவில்லை. பிறகு தன்னை யறியாமலேயே தூங்கி விட்டாள்.

திடீரென்று விழித்துக் கொண்ட பரிமளா வுக்கு ஒரு உருவம் வருவதுபோல் தோன்றவே விளக்கைப் போட்டாள். விளக்கு சரியில்லாத தால் ஒரு கணம் "பளிச்" என்று எரிந்துவிட்டு அணைந்து விட்டது. அந்த ஒரு நொடியிலேயே பரிமளா பாலசந்தர் நடுக்கதுடன் நிற்பதைப் பார்த்து விட்டாள்!

மறுவிநாடியே பாலசந்தர் அங்கிருந்து வெகு வேகமாக சென்றுவிட்டான்.

இதற்குள் எழுந்த நிர்மலா என்ன நடந்ததென்று பரிமளாவைக் கேட்டு அறிந்து கொண்டாள்.

வந்தது பாலசந்தர்தானா?" என்று சந்தேகத்தோடு கேட்டாள் நிர்மலா!

"ஆமாம். அதை என்னால் உறுதியாகக் கூற முடியும். அந்த பிஸ்கெட் பெட்டியையும் எடுத்துக்கொண்டு சென்றுவிட்டான்!" என்று ஆத்திரத்தோடு கூறினாள் பரிமளா.

"இது எதில் கொண்டு போய்விடுமோ தெரியவில்லை" என்று சலித்துக் கொண்டாள் நிர்மலா,

"இது எதிலும் கொண்டுபோய் விடாது!" என்று கூறிய பரிமளா "நாளை காலை பொழுது விடிந்ததும் நான் நிச்சயம் பாலசந்தரின் ஜாகைக்குச் சென்று எச்சரிக்கை செய்யத்தான் போகிறேன்!" என்றாள் தீர்க்கமான குரலில்.

மறுநாள் பொழுது விடிந்ததும் தனது வேலைகளை சீக்கிரமாக முடித்துக்கொண்ட பரிமளா பாலசந்தரின் வீட்டிற்குச் சென்றாள். பாலசந்தர் அவளை ஆவலுடன் வரவேற்றான்.

"நீங்கள் செய்யும் ஒவ்வொரு செய்கையும் எனக்கு அளவு கடந்த ஆத்திரத்தை ஏற் படுத்துகிறது. பாலசந்தர்!" என்று சலிப்போடு கூறிய பரிமளா, "என்னைக் கேட் காமல் என் வீட்டிற்குள் நுழைந்து பிஸ்கெட் பெட்டியை வைத்தது முதல் குற்றம்! இரண் டாவதாக நடுநிசியில் இரண்டு பெண்கள் தங்கி இருக்கும் ஒரு ஜாகைக்குள் நுழைந்து அங்கு இருக்கும் பொருளை எடுத்துக்கொண்டு ஓடியது ஒரு குற்றம்! பிறகு என்று ஏதோ சொல்லப் போனவளை தடுத்தது பாலசந்தரின் குறுக்கீடு.

"சற்று பொறு, பரிமளா! நான் அந்தக் குற்றங்களை செய்தேன் என்று ஒப்புக் கொள் கிறேன். ஆனால் உனக்கு நான் ஒரு எச்சரிக்கை செய்யவேண்டும். நீ எந்த இடத்தில் இருந் தாலும் சரி; இரவு படுக்கும் பொழுது உன் அறைக்கதவை உட்புறம் தாளிட்டுக்கொள்வது நல்லது அதோடு, நீ உன் தாயாருக்கு எந்தக் காரணத்தை முன்னிட்டும் கடிதம் எழுதவே கூடாது!" என்றார் பாலசந்தர்.

அதைக் கேட்டதும் பரிமளா பிரமை தட்டிப்போய் விட்டாள். "அந்த விஷயம் உங் களுக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டாள்

பாலசந்தர் அதற்கு எந்தவிதமான பதிலும் கூறவில்லை.

பரிமளாவிற்கு ஆபீஸ் செல்ல வேண்டிய நேரம் வந்து விட்டதால் தனது கேள்விக்கு பதில் தெரிந்து கொள்ள முடியாமலேயே புறப் பட்டு சென்றுள்.

அவள் சென்ற பிறகு, தனது ஜாகையில் உள் அறையில் அமர்ந்திருந்த ஒரு குள்ள மனிதனை கூப்பிட்டான் பாலசந்தர். அந்தக் குள்ள மனிதன் ஆடி அசைந்து நடந்து வந்தான்.

"வேலு! ராஜகண்ணுவை உனக்குத் தெரியுமா?"

"சோலைமலை ஜமீன்தாரினியுடன் சுற்றும் ராஜகண்ணுதானே? அவனை எனக்கு நன்ருகத் தெரியும். அவன் விலாசமும் என்னிடமிருக்கிறது!" என்ருன் வேலு.

"அப்படியாஞல் ரொம்ப நல்லது. நீ அந்த மனிதனை தொடர்ந்து அவன் செய்கைகள் அனைத்தையும் கண்காணித்து வந்து என்னிடம் தெரிவிக்க வேண்டும்" என்று கட்டளையிட்ட பாலசந்தர் "உனக்கு அவனைப் பிடிக்குமா என்று கேட்டான்.

"அவனுடன் சண்டைபோட நிச்சயமாகப் பிடிக்கும்" என்று உற்சாகத்தோடு கூறிய வேலு அவன் தடியாக பஞ்சு பொதிபோல இருக்கிருன் என்ருன்.

அதைக்கேட்டு புன்னகை பூத்தான் பால சந்தர்.

உனக்கு இன்னுமொரு வேலையும் இருக்கிறது. எம். எஸ். வ. 3678 என்ற ஃபோர்ட் கார் யாருடையது என்பதையும் கண்டுபிடிக்க வேண்டும்'' என்றான்.

சரி காரின் சொந்தக்காரரை கண்டு பிடிப்பதில் அதிக சிரமமிருக்காது'' என்று கூறியபடி அறையை விட்டு வெளியேறினான் வேலு.

அதற்குப் பிறகு ஒரு நீண்ட கடிதம் எழுதித் தபாலில் சேர்ப்பித்து விட்டு பால சந்தர் உறங்கப் போனான். இரவு முழுவதும் உறங்காததினால் விரைவில் நித்திரை அவனைத் தழுவியது!

COMICS PDF TIMES

## 7

பாரிஸ்டர் சுந்தர வடிவேலிடம் கூறி, தனது காரிய தரிசினியாக பரிமளாவை நியமிக்கும் படி கூறி விட்டு ஜமீன் தாரிணி சாவித்திரி தேவி கூறிவிட்டுப் போயிருந்ததால், திங்கட்கிழமை அவள் சோலைமலைக்கு வேலை ஏற்கச் செல்லவேண்டும் என்று கூறினார் பாரிஸ்டர்.

அதன் படி திங்கட் கிழமை பரிமளா சோலை மலைக்குக் கிளப்பிச் சென்று விட்டாள். அவளுக்கு அடிக்கடி ஜெயிலுக்குப் போய் பாரிஸ்டருக்காக கையெழுத்து வாங்கும் வேலை பிடிக்காததினால் அந்த காரியதரிசினி வேலைக்கு உடனே ஒப்புக் கொண்டாள்

ஜமீன்தாரிணி தனது நிதி ஆலோசகர் ராஜகண்ணுவை பரிமளாவிற்கு அறிமுகம் செய்துவைத்தாள்.

எல்லோரும் பரிமளாவிடம் அன்பாகவே பழகினார்கள், அங்கிருந்த வேலைக்காரர்களும் பரிமளாவிடம் மரியாதையோடும், பக்தியோடும் நடந்து கொண்டனர். முதல் நாளே பரிமளாவிற்கு அந்த இடம் ரொம்பவும் பிடித்தும் போய் விட்டது.

ஜமீன்தாரிணி, ராஜகண்ணு, பரிமளா மூவரும் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர்.

திடீரென்று சாவித்திரி தேவி, "ராஜக்கண்ணு! அதோ வெளியே சாலையில் சென்றுக் கொண்டிருக்கிறானே, அந்த இளைஞன் யார்?" என்று கேட்டாள்.

ஜன்னல் வழியாக வெளியே எட்டிப்பார்த்தார் ராஜகண்ணு. வெறுப் போடு தன் முகத்தைத் திருப்பிக் கொண்டு, "அந்த ஆள்,

சென்னையிலேயே தலை சிறந்த துப்பறிவாளன் என்று பெயர் வாங்கியவன். எனக்கும் அவனுக்கும் பகைமை உண்டு!'' என்றான்.

அது யார் என்று அறிந்து கொள்ளும் ஆவலில் பரிமளா வெளியே எட்டிப் பார்த்தாள் அங்கு சென்று கொண்டிருந்த ஆளைப் பார்த்ததும் அவள் பிரமை தட்டிப் போய்விட்டாள்.

அது...பாலசந்தர் தான்!

சிறிது நேரம் கழித்து பரிமளா தனக்காக ஒதுக்கப்பட்டிருந்த அறையினுள் நுழைந்தாள், அங்கு எல்லாம் வெகு ஆடம்பரமாக வைக்கப் பட்டிருந்தன. ஒரு மகாராணியின் அறையைப் போல் அந்த அறை காட்சி யளித்தது. இதை யெல்லாம் பார்த்த தும் வெகுவாக ஆச்சரிய மடைந்தாள் பரிமளா.

அந்தக் சமயத்தில் மாளிகையை விட்டுக் கிளம்பிய ராஜகண்ணு, வெளியே சாலையில் குறுக்கும் நெடுக்குமாக நடந்துகொண்டிருந்த பாலசந்தரிடம் சென்றான்.

'நீ எதற்காக இங்கு இப்படி உலவுகிறாய்? யாரை வேவு பார்ப்பதற்காக இங்கு வந்திருக்கிறாய்? உன் நோக்கம் என்ன?'' என்று சீறினான் ராஜகண்ணு.

யாரையும் கொலை செய்வது என் நோக்க மல்ல!" என்று தீவ ஆலட்சியமாகக் கூறிய பாலசந்தர் ராஜகண்ணு! கள்ள நோட்டு அடிக்காதே! நீ நோட்டுக்களை எண்ணும்போது நீ கம்பியை எண்ண நேரிடும் என்பதை நீ மறந்து விடாதே! ஒரு பெண்ணைக் கற் பழிக்க முயலும்போது அதற்கு எத்தனை ஆண்டு சிறைத்தண்டனை கிடைக்குமென்பதை சற்று சிந்தித்துப் பார். நான் கூறுவதெல்லாம் உன் நன்மைக்குத்தான். என் சொல்படி நீ நடக்காவிட்டால் நீயும் உன் நண்பர் டாக்டர் மனோகரும் என்னிடமோ அல்லது வேறு யாராவது துப்பறிவாளனிடமோ மாட்டிக் கொண்டு தத்தளிக்கப் போகிறீர்கள்" என்று நிதானமான குரலில் கூறியபடி அவ்விடத்தை விட்டு ராஜகண்ணுவின் பதிலுக்குக்கூட காத்தி ராமல் கிளம்பி வேகமாக நடந்தான்.

இதை எல்லாம் கேட்ட ராஜகண்ணுவின் முகம் ஆத்திரத்தால் சிவந்தது. ஏதோ தன் வாயிற்குள் முணுமுணுத்தபடியே எதிர் திசையில் நடந்தான் ராஜகண்ணு,

பாலசந்தரின் உதவியாளனான வேலு சற்று தூரத்தில் நின்றுகொண்டிருந்தான். தன்னைக் கடந்து ராஜகண்ணு போகும்போது அவன் ஏதோ ஒருபாட்டை முணுமுணுத்தபடி ஓரக்கண்ணால் ராஜகண்ணுவையே பார்த்துக் கொண்டிருந்தான்.

ராஜகண்ணு, வேலுவை கவனிக்காமல் ஆத்திரத்தோடு, "அவனை பழி வாங்காமல் விடப்போவதில்லை! அவன் உயிருடன் இருக்கும் வரையில் எனக்கு நிம்மதி இருக்காது!" என்று கூறியபடி சென்றான்.

அதைக்கேட்டுத் தனக்குள் சிரித்துக் கொண்ட வேலு, பாலசந்தர் சென்ற திசைப் பக்கம் நடந்து சென்றான்.

சிறிது தூரத்தில் பாலசந்தர் ஒரு கல்லின் மேல் உட்கார்ந்திருப்பதைப் பார்த்துவிட்டு அவனருகில் சென்ற வேலு ராஜகண்ணு கூறியதைத் தெரிவித்தான்.

அதைக்கேட்டு அலட்சியமாகச் சிரித்த பாலசந்தர் 'அவன் சாகும்வரை என் பிடியி லிருந்து மீளமுடியாதது" என்று கூறிவிட்டு இந்த மாளிகைக்கு சிறிது தூரத்திலுள்ள ஒரு மோட்டார் ஷெட்டை வாடகைக்கு விடப் போகிறார்களாம் நீ உடனடியாக அதை வாட கைக்கு எடுத்துக் கொண்டுவிடு" என்று கூறி னான்.

சரி" என்ற பாவனையில் தலையாட்டிய வேலு, கார் மோட்டார் ஷெட்டை நோக்கி நடந்தான்.

சிறிது நேரம் யாருக்காகவோ அந்த மாளிகையின் வாயிலிலேயே காத்திருந்தான் பாலசந்தர். ஜமீன்தாரிணியின் சமையற்காரனான துரைசாமி மாளிகையை விட்டு வெளியே வந்தான். அவனுக்குச் சிறிது தூரம் தள்ளி அவனைப் பின்தொடர்ந்தான் பாலசந்தர். இது அவனுக்கு மிகுந்த பலனை அளித்தது.

# 8

பகல் சாப்பாடு சாப்பிட்டுக் கொண்டிருக்கும் பொழுது சமயற்காரன் துரைசாமியை பரிமளாவிற்கு அறிமுகப் படுத்தினுள் ஜமீன்தாரிணி. அவன் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளியிலிருந்து அனுப்பப் பட்டவன் என்றும், அவன் நன்றி விசுவாசமுள்ள ஒரு நல்ல உழைப்பாளி என்றும் ஜமீன்தாரிணி சாவித்திரிதேவி பாராட்டிக்கூறினுள்.

சாப்பிட்டு விட்டுத் தன் அறைக்குத் திரும்பினுள் பரிமளா. அவளுக்கென்றே ஒரு தனி வேலைக் காரியை நியமித்துக் கொடுத்திருந்தாள் சாவித்திரிதேவி.

அந்த வேலைக்காரி சளசள வென்று சதா சர்வ காலமும் ஏதாவது கதைகளையே பேசிக்

கொண்டிருந்தாள், பரிமளா அவள் பேச்சை ரசித்துக் கேட்பது போல் பாவனை செய்து கொண்டிருந்தாள்,

"ஜமீன்தாரிணி அம்மா ஏன் தான் அந்த முரட்டு ஆளான துரைசாமியை வேலைக்கு வைத்துக் கொண்டிருக்கிறார்களோ தெரிய வில்லை" என்று சலிப்போடு கூறிய அந்த வேலைக் காரி, "அவன் மகா சிடுமூஞ்சியாக இருக்கிறான்! இங்கிதமாகவே அவனுக்குப் பேசத் தெரிய வில்லை. தன்னைப்பெரிய மனிதன் என்று நினைத் துக் கொண்டு எல்லோரையும் அடக்கி ஆளும் மனோபாவத்துடனும் அவன் நடந்து கொள்கி றான்!" என்றாள். அவள் அப்படி பேசும் பொழுது அவள் குரல் ஆத்திரத்தால் படிப்படி யாக உயர்ந்து வந்தது.

"உனக்கு ஏன் அவனைப் பிடிக்கவில்லை?" என்று கேட்டாள் பரிமளா.

"அவனிடம் நான் ஒரு சமயம் பேச்சு கொடுக்க முயன்றபோது, பெண்களைப் போலே தனக்கு வெட்டிப் பேச்சு பேசுவது பிடிக்காது என்று கூறி என்னை அவமதித்து விட்டான்!" என்றாள் ஆத்திரம் கலந்த குரலில் அவள் கூறிய போது அவள் முகம் செக்கச்செவேல் என்று சிவந்து விட்டது.

"மொத்தத்தில் துரைசாமி எல்லோரா லும் வெறுக்கப்படும் ஒரு மர்மமான மனிதன்!"

என்று தொடர்ந்து கூறினாள் அந்த வேலைக்காரி,

தனது பெட்டியிலிருந்த துணிகளை யெல்லாம் அங்கிருந்த பீரோவில் அடுக்கி வைப்பதற்காக அந்த பீரோவைத்திறந்தாள் பரிமளா.

அந்த பீரோவின் நடுத்தட்டில் ஓர் அழகிய இளைஞனின் புகைப்படம் இருந்தது. அந்த இளைஞனின் அழகு மனதைக் கொள்ளை கொள்ளுவதாக இருந்தது.

அந்தப் புகைப் படத்தை வேலைக்காரியிடம் காட்டிய பரிமளா, "இது யார் என்று உனக்குத் தெரியுமா?" என்று கேட்டாள்.

"எனக்கு தெரியவில்லை அம்மா!" என்று கூறிய அந்த வேலைக்காரி, "நான் இங்கு கடந்த மூன்று மாதங்களாகத் தான வேலைப் பார்த்து வருகிறேன்" என்றாள்.

அந்த புகைப்படத்தை எடுத்துக் கொண்டு ஜமீன்தாரணியின் அறைக்குச் சென்ற பரிமளா, அதை சாவித்திரி தேவியிடம் கொடுத்தாள் சாவித்திரிதேவி, அந்தப் புகைப்படத்தைப் பற்றி யாதொரு தகவலும் தெரிவிக்காமல் அதை வாங்கித் தனது பீரோவில் வைத்தும் பூட்டி விட்டாள். குழம்பிய மனதுடன் தன் அறைக்குத் திரும்பினாள் பரிமளா.

அந்த அறைக்கு அருகிலிருந்த அழகிய பால்கனியை நோக்கிச் சென்ருள் பரிமளா. அந்த பால்கனிக்குச் செல்ல முடியாதபடி மரக் கிராதி வைத்துத் தடுக்கப் பட்டிருந்தது.

"பகல் நேரத்தில் அந்த பால்கனிப்பக்கம் செல்லக் கூடாதென்பது ஜமீன்தாரணியின் உத்தரவு" என்று தெரிவித்தாள் வேலைக்காரி.

இரவு சாப்பாட்டின் போது தான் ஜமீன் தாரனியை பரிமளா மீண்டும் சந்தித்தாள்.

'நான் நாளைய தினம் வெளியே செல்கி றேன், பரிமளா! நீ வேண்டுமாளுல் உன் தோழியை நாளைய தினம் மாளிகைக்கு அழை த்துக் கொள்ளலாம்" என்ருள் சாவித்திரிதேவி.

பரிமளா உடனே நிர்மலாவிற்குத் தபால் எழுதி மறு நாள் காலையில் அவளை வரவழைத் தாள்.

நிர்மலா வந்து சேர்ந்ததும் முதல் வேலை யாக, "பால்சந்தர் ஒரு பிரபலமான துப்பறிவா ளராம்!" என்று கூறிஞள் பரிமளா.

அந்தச்செய்தியைக் கேட்டு பிரமைதட்டிப் போய் விட்டாள் நிர்மலா. அவள் தன் நிலை க்கு வருவதற்கு சிறிது நேரமாகியது. இருவரும் சிறிது நேரம் பொதுவான விஷயங்களைப் பற் றிப் பேசிக் கொண்டிருந்தனர். பிறகு இருவ ரும் பால்கனிப் பக்கம் சென்றனர்.

"இவ்வளவு அற்புதமான இடத்திற்கு பகல் நேரத்துல் போகக் கூடாது என்ற உத்தரவு இருக்கிறது" என்று கூறிக் கொண்டே பரிமளா கைப்பிடி சுவர் மீது சாய்ந்து நின்று கொண்டு வெளிக் காட்சிகளைப் பார்வையிட்டாள்.

நிர்மலாவிற்கு பால்கனியிலிருந்து கீழே பார்த்தால் மயக்கம் வருமாகையால் அவள் அந்த இடத்தை விட்டு சற்றுத் தள்ளியே நின்று கொண்டிருந்தாள்.

தன் காலின் கீழிருக்கும் தளம் தகர்வது போல் உணர்வதுபோல் உணர்ந்த பரிமளா வேகமாக ஓடி வரப் பார்த்தாள். ஆனால் அதே விநாடி அவள் நின்றிருந்த இடம் பயங்கர சத்தத்துடன் வெடித்து அதல பாதாளத்தில் விழுந்தது!

மேலேயிருந்து கீழ்நோக்கி விழும்பொழுது சுவற்றிலிருந்து நீட்டிக் கொண்டிருந்த ஒரு இரும்புக் கம்பியை பரிமளா பற்றிக் கொண்டாள்.

சிறிது நேரத்திலெல்லாம் அவள் பிடி தளர ஆரம்பித்தது. தோள்கள் வலியினால் துடித்தன. அந்தச் சமயத்தில் துரைசாமி அவளைப் பாய்ந்து மேலே இழுத்து வந்து அவளது அறைக்குள் போட்டான்.

போலீஸார் அங்கு வந்து பால்கனி இருந்த இடத்தை ஆராய்ந்து பார்த்து விட்டு, அந்த

பால்கனியின் தளம் விரிசல் கண்டிருக்க வேண்டுமென்று அபிப்ராயம் கூறிவிட்டுத் அந்த மாளிகையின் மற்ற பால்கனிகளையும் பார்வை இடச் சென்றனர்,

நிர்மலா பதற்குத்தோடு அவளுக்கு வேண்டிய உதவிகளை, துரைசாமியோடு சேர்ந்து செய்தாள்.

நிர்மலா விடை பெற்றுச் சென்ற சிறிது நேரத்திற்கெல்லாம் ஜமீன்தாரிணி சாவித்திரி தேவி வந்துசேர்ந்தாள். நடந்ததை யெல்லாம் கேள்வியுற்று மிகவும் வருந்தினாள்;

"நான் அந்த பால்கனிக்கு அதற்காகத் தான் கிராதிவைக்கச் சொன்னேன். ஆனால் அந்தக் கிராதியையே யாரோ நீக்கி விட்டிருக்கிறார்கள்" என்றாள்.

தொடர்ந்து பேசினாள் ஜமீன்தாரிணி

"பரிமளா நீ பயப்படவே வேண்டியதில்லை என் மகன் பாலாஜியின் அறையை உனக்கு தான் தருகிறேன். நீ அங்கே நிம்மதியாக இருக்கலாம். வேண்டுமானால் உன் தோழி நிர்மலாவும் தினமும் இரவு உனக்குத் துணை யாக அங்கு வந்து படுத்துக் கொள்ளலாம். அதைத் தெரிந்து கொள்ள நீ என்னுடைய காரை எடுத்துக்கொண்டு போய் நீ பாரிஸ்டர்

சுந்தர வடிவேலுவின் ஜாகையில் அவனை சந்தித்து. அவனுடைய பதிலை உடனே எனக்கு டெலிபோன் செய்!" என்று கூறி நிறுத்தினாள்

அதன்படியே செய்வதாக ஒப்புக் கொண்ட பரிமளா ஜமீன் தாரிணியின் காரை எடுத்துக் கொண்டு பாரிஸ்டர் சுந்தர வடிவேலின் ஜாகைக்கு விரைந்தார்

நிர்மலாவிடம் பரிமளா விஷயத்தைக்கூறியதும் அவள் அதற்கு உடனே ஒப்புக் கொண்டாள்.

அந்தச் செய்தியை டெலிபோன் மூலம் ஜமீன் தாரிணிக்குத் தெரிவித்தாள் பரிமளா.

# 9

பரிமளா, பாரிஸ்டர் ஆபீஸிலிருந்து உடனே சர்க்கார் காரியாலயத்தில் உள் நாட்டிலாகா உதவிக் காரியதரிசியைப் பார்க்கச் சென்றாள். நெடு நேரம் காத்திருந்த பிறகுதான் அவரை காண முடிந்தது.

உதவிக்காரியதரிசி அருணாச்சலம் கூறியதாவது, "காவேரியின் தண்டனைக் காலம் அநே

கமாக முடிந்து விட்டது. ஆகவே அதுவரை காத்திருப்பதே உசிதமானதாகும். இருபது ஆண்டுகள் கழிந்த பின் ஒருவரை குற்றவாளி என்றோ, நிரபராதி என்றோ நிரூபிப்பது கடினம், இந்த வழக்கில் உனது தாயாருக்குப் பாதகமான சாட்சி ஒன்றும், சாதகமான சாட்சி ஒன்றும் மறைக்கப் பட்டுவிட்டன. பாதகமானது விஷமும், திருட்டு நகைகளும் வைக்கப் பட்டிருந்த பெட்டியின் சாவி சாதகமானது தற்கொலை செய்து கொண்ட விஜயகுமாரித் தன் கைப்பட எழுதி வைத்திருந்த கடிதம். அந்தக் கடிதம் மட்டும் கிடைத்திருந்தால், உன் தாயார் நிரபராதி என்று நிரூபிக்கப்பட்டிருக்கும், மேலும் அந்நிகழ்ச்சி நடப்பதற்கு இரு வாரங்களுக்கு முன் தான் உன் தந்தை மறைந்து போயிருக்கிறார். அவரது மறைவிற்கு காரணம் உனது தாயார் தான் என்று போலீசார் சந்தேகித்தினர்,

அப்படியா?" என்று சோர்வோடு கேட்ட பரிமளா அந்த உதவிக் காரியதரிசியிடம்விடை பெற்றுக் கொண்டு கிளம்பினாள்.

அவள் சோலைமலை மாளிகைக்குத் திரும்பி செல்கையில் அவள் மனதில் ஓர் தெளிவு ஏற்பட்டிருந்தது,

மாளிகைக்குள் நுழைந்த பரிமளா ஒரு பயங்கரக் காட்சியைக் காண நேர்ந்தது;

இளைய ஜமீன்தார் தனது தாயாருடன் கடுமையான குரலில் விவாதித்துக் கொண்டிருந்தது.

"நீ உன் எண்ணப்படி ராஜகண்ணுவைக் கணவனாக்கிக்கொண்டு இளைய ஜமீன்தாராகிய என்னுடைய சொத்தை அழித்துக் கொண்டு நீ வாழ நினைப்பதெல்லாம் எனக்குத் தெரியும். என்று சிறிய பாலாஜி உன் கட்டளையின்படி, சமயற்கார துரைசாமியும், டாக்டர் மனோகரும் கூறும்படி நான் வாழ முடியாது!" என்று உரத்தக் குரலில் முழங்கிக் கொண்டிருந்தான்.

ஒரு ஆப்பிள் பழத்தை கத்தியினால் வெட்டிக் கொண்டிருந்த ஜமீன்தாரிணி சாவித்திரி தேவி, தன் கையிலிருந்த அந்தக் கத்தியினாலே சடாரென பாலாஜியின் கன்னத்தில் காயப் படுத்தி விட்டாள்!

இதைக் கண்ட பரிமளாவின் உடல் நடுங்கியது. அந்தக் கொடூரத்தைக் கண்டு அவள் கலங்கி நின்றாள்.

பாலாஜி கலங்கிய கண்களுடன் தன் கன்னத்தைப் பிடித்தபடி அந்த அறையை விட்டு வெளியேறியவுடன், சுப உணர்வடைந்த பரி

மளா ஜமீன்தாரிணி இருந்த அறைக்குள் நுழைந்தாள்.

"உன் தோழி நிர்மலா இங்கு வருவதைப் பற்றி எனக்கு ரொம்ப மகிழ்ச்சி" என்று கூறிய சாவித்திரிதேவி, இருந்த போதிலும் இன்றிரவு நான் வெளியே செல்வதால் உன்தோழியைநான் பார்க்க முடியாதென்றே நினைக்கிறேன்" என்றாள்.

பரிமளாவிடம் கூறியபடியே ஜமீன்தாரிணி இரவு வெளியே கிளம்பிச் சென்றுவிட்டாள். அதன் பிறகுதான் நிர்மலா வந்தாள்.

நிர்மலாவை பரிமளா பாலாஜிக்கு அறிமுகம் செய்து வைத்தாள்.

மூவரும் மிகுந்த ஆனந்தத்துடன் பேசிக் கொண்டு இரவு சாப்பாட்டை முடித்துக் கொண்டனர்.

பாலாஜி இடையில்தான் ஜமீன்தாரிணியின் வாசகசாலையில் மின்சாரத்தின் உதவி கொண்டு ஓர் அற்புதமான வேலை செய்து கொடுத்து இருப்பதாகப் பேச்சை ஆரம்பித்து அதைப் பாதியிலேயே நிறுத்தி விட்டான். அதன் பிறகு தனக்கு மின்சார நிலையத்தில் உள்ள அபாரத் திறமையைப் பற்றி பேசினான்,

தோழிகள் இருவரும் உறங்கச் சென்ற னர். அவர்கள் படுக்கையில் படுத்த சிறிது நேரத்திற்கெல்லாம் கதவு தட்டப்பட்டது.

பரிமளா கதவைத் திறந்தாள். அங்கும் பாலாஜி நின்று கொண்டிருந்தான்.

நான் எதையோ இங்கே மறந்துவிட்டுச் சென்று விட்டேன்." கூறிய பாலாஜீ, அது என்னவென்று தெரிவிக்காமல், "பரிமளா!ஏதா வது விசித்திரமான நிகழ்ச்சி நடந்தால் பயந்து அதை ஜமீன்தாரிணியிடம்கூறிவிடாதே!என்று எச்சரிக்கை செய்து விட்டு சென்று விட்டான்.

படுக்கையில் படுத்த சிறிது நேரத்திற்கெல் லாம் பரிமளாவிற்கும், நிர்மலாவிற்கும், ராஜு கண்ணுவும், சாவித்திரிதேவியும் பேசிக்கொள் வது கேட்டது.

அவள் அறையில் நான் போட்டுவைத்த புகைப்படத்தில் உள்ளவனை அவளால் கண்டு பிடிக்க முடியவில்லை என்று குதூகலத்தோடு கூறிய சாவித்திரிதேவி, "ஆனால் பாலாஜிக்கு நாம் இருவரும் திருமணம் செய்துகொள்ளப் போவது எப்படியோ தெரிந்து விட்டது!" என் றான்.

தோழிகள் இருவரும் திடுக்கிட்டுப்போய் அறையை ஆராய்ந்ததில் படுக்கைக்கு மேலே உள்ள அல்மானகிரித் துணியின் உள்ளே மிக

சாரக் கம்பிகள் இணைக்கப்பட்ட ஒரு கருப்புப் பெட்டியும், கூடவே மின்சாரக் கம்பி இணைக்கப்பட்ட மற்றொரு வட்டவடிவமான பெட்டியும் இருந்தன.

பாலாஜி, ஜமீன்தாரிணி உறக்கமாகப்பேசும் இடத்தில் ஒரு இணைப்புக்கருவியை மறைத்துவைத்து விட்டு, தனது படுக்கைக்கு மேல் ஓர் ஒலிப்பரப்பும் கருவியை வைத்திருந்தார். அதன் மூலம்தான் அவருக்குத் தன் தாயின் ரகசியங்கள் தெரிந்தன எல்லாவற்றையும் அறிந்த பரிமளாவும், நிர்மலாவும் வியப்படைந்தனர்.

எதற்காக பாலாஜி அறைக்கதவைத் தட்டினான். என்பதும் அவர்களுக்குப் புரிந்துவிட்டது.

பரிமளா, மறுபடியும் ஏதேனும் தகவலும் தெரிய வருமா? என்ற ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். ஆனால் வெகு நேரம் வரை அவளுக்கு யாதொரு விதமான தகவலும் கிடைக்கவில்லை.

இரவு நான்கு மணிக்குப் பிறகு, "மரணத்திற்கு வெகு அருகாமையிலிருக்கிறாள் பரிமளா! என்ற குரல் கேட்டது.

அது பாலச்சந்தரின் குரல்தான்!

பாலச்சந்தரின் வருகை அவளுக்கு எல்லையற்ற களிப்பைத் தூண்டி விட்டது. அவனைக் கண்டு தன் சந்தேகங்களையெல்லாம் விளக்கிக் கொள்ள வேண்டுமென்ற ஆவல் மிகுதியினால் அவனைக் காண கீழே இறங்கி வந்தாள்.

அவள் அவ்வளவு ஆவலாக இறங்கி வந்தாளே தவிர, அவள் எதிர் பார்த்தது போல் முன் ஹாலில் பாலச்சந்தரோ, அவனது சகாவோ அங்கு இல்லை.

இந்தச் சத்தம் கேட்டு விழித்த ஜமீன் தாரிணியும் கீழே இறங்கி வந்தாள்.

"இங்கு என்ன செய்கிறாய், பரிமளா?"

ஏதோ சத்தம் கேட்டாற் போலிருந்தது, என்னவென்று பார்க்க வந்தேன். வேறொன் றுமில்லை!" என்று கூறிய பரிமளா ஏமாற்றத் தோடு மாடிப் படிகளில் ஏறிச் சென்றாள்.

மறு நாள் காலை துரைசாமி அவளிடம், "ஜமீன்தாரிணி நேற்றிரவு வெகு நேரம் பேசிக் கொண்டிருந்தார். உங்களுக்கு அது கேட்டிருக் காது!" என்றான் எங்கோ பார்த்தபடி,

அதைக் கேட்டதும், பரிமளாவுக்கு ஒரு மர்மம் விளங்கியது. ஒலி பெருக்கியின் ரகசிய டெலிபோன் கருவி மறைத்து வைக்கப் பட்டி ருக்கும் இடம் வாசகசாலை என்றும், பாலசந்த

னும் அவனது நண்பர்களும் அங்கு தான் ஒளிந்திருந்தார்கள் என்றும் அறிந்து கொண்டாள்.

அன்று பகல் இளைய ஜமீன்தார், பரிமளாவின் அறைக்கு வந்து இணைப்புக் கருவிகளை நீக்கி விட்டார்.

ஜமீன்தாரிணியை சந்தித்த பரிமளா, எனக்கு இந்தவேலை பிடிக்கவில்லை. நான் இங்கிருந்து கிளம்பிச் சென்று விட வேண்டுமென்று விரும்புகிறேன்! என்றாள்.

"உன் இஷ்டம் போல் செய். ஆனால் நீ இன்னும் இரண்டொரு தினங்கள் இங்கு தங்கி இருந்து விட்டு பிறகு போகலாம். ஏனென்றால் உனக்கு வாசகசாலையில் கொஞ்சம் வேலை இருக்கிறது" என்றாள் சாவித்திரி தேவி.

அங்கிருந்த டாக்டர் மனோகரையும் பரிமளாவிற்கு அறிமுகப் படுத்தி வைத்தாள்.

"பரிமளா! நீ வெறும் மனப் பிரமையினால் கற்பனைகளுக்கு இடம் கொடுத்து பயந்து போயிருக்கிறாய்" என்றார் டாக்டர் மனோகர்.

மனோகர் மீது ஏனோ பரிமளாவுக்கு ஒரு வித வெறுப்பு ஏற்பட்டது. அதனால் வாசகச் சாலையை நோக்கி வேகமாக நடந்தாள்.

வாசகசாலையில் அவள் புத்தகங்களையெல்லாம் ஒழுங்காக அடுக்கி வைத்துக் கொண்டிருந்தபோது, அங்கு துரைசாமி வந்து சேர்ந்தான்.

"உங்களை காண வேண்டுமென்று யாரோ ஒரு கனவான் சாப்பாட்டுக் கூடத்தில் காத்திருக்கிறார், அம்மா! என்றார் துரைசாமி.

பரிமளா ஆச்சரியத்தோடு அது யாராக இருக்குமென்று எண்ணியபடி சாப்பாட்டுக் கூடத்திற்குச் சென்றாள். ஆனால் அங்கு யாருமே இல்லை. அங்கிருந்த வேலைக்காரியை விசாரித்ததில், அங்கு யாருமே வரவில்லை என்று அறிந்துக் கொண்டாள்.

தன்னை வாசக சாலையிலிருந்து அப்புறப் படுத்த வேண்டுமென்ற எண்ணத்தினால் தான் துரைசாமி அவ்விதம் கூறி இருக்கிறான் என்பதை அறிந்த பரிமளா மிகுந்த சினத்துடன் வாசகசாலையை நோக்கி நடந்தாள்.

அப்பொழுது அவளுக்கு வேறு ஒரு நினைவு வந்தது. வாசகசாலையில் ஒரு சிறிய அலமாரி மட்டும், புத்தகங்களை எடுக்க முடியாதபடி நெருக்கமான வலைக் கம்பிக் கதவினால் பூட்டப் பட்டிருந்ததை அவள் கவனித்திருந்தாள். அதற்குள் என்ன இருக்கிறதென்று கண்டு பிடிக்க வேண்டுமென்று நினைத்தாள்.

ஆனால் இப்பொழுது அவள் மனம் ஆத்திரத்தால் குமுறிக்கொண்டிருந்தது. எதற்காக தன்னை துரைசாமி அவ்விடத்தை விட்டு அகற்ற வேண்டும்? அவன் தன்னை வேவு பார்ப்பதற்கென்றே ஜமீன்தாரிணி சாவித்திரி தேவியினால் நியமிக்கப்பட்டவனா? ஆனால் அப்படி இருந்தால் அன்று காலை அவன் எதற்காக சாவித்திரிதேவி இரவு வாசகசாலையில் பேசிக்கொண்டிருந்தாள் என்று தன்னிடம் கூறினான்?

ஒரு வேளை பாலசுந்தர் இந்த துரைசாமியை இங்கு சமயற்காரனாக நியமித்தானோ? ஆனால் அப்படி இருக்க முடியாது! ஏனென்றால் பரிமளா அங்கு வருவதற்கு முன்பிருந்தே துரைசாமி அங்கு வேலை பார்த்து வருகிறான்

எது எப்படி இருந்தாலும் என்னை அவன் வாசகசாலையை விட்டு வெளியேற்றியது மகத்தான குற்றம் என்று எண்ணிய பரிமளா ஆத்திரத்தோடு, "துரைசாமி" என்று கூப்பிட்டபடி வாசகசாலையினுள் நுழைந்தாள்.

ஆனால் அடுத்த கணம் அவள் திகைத்துப் போய் அசைவற்று நின்று விட்டாள்.

துரைசாமி மரணவேதனையோடு தரையில் மல்லாக்க விழுந்து கிடந்தான்

# 10

பரிமளா பரபரப்புடன் வேலைக்காரியை அழைத்து டாக்டருக்கு டெலிபோன் செய்யும் படி சொல்லிவிட்டு, ஜமீன்தாரிணியிடம் ஓடிச் சென்று தகவலைக் கூறினாள்.

இதற்குள் பக்கத்திலிருந்த சர்க்கார் ஆஸ்பத்திரி ஆம்புலன்ஸ் வந்தது. அதில் துரைசாமியை ஏற்றுவதற்காக "ஸ்ட்ரெச்சரி"ல் அவனைத் தூக்கிவைக்க டாக்டர் மனோகரும் ராஜகண்ணுவும் முயன்று கொண்டிருந்த பொழுது. பாலசுந்தர் அவசரமாக அங்கு வந்து சேர்ந்தான்.

ஜமீன்தாரிணி தடுத்தும் கேளாமல் "ஸ்ட்ரெச்சரி" லிருந்து துரைசாமியை கீழே இறக்கி முகத்தில் தண்ணீர் தெளித்த பாலசுந்தர் வேகமாக அவனுக்கு மூச்சு வரவழைக்கப் பாடுபட்டான்.

ராஜகண்ணு அதை ஆட்சேபித்து ஏதோ கூறினான் ஆனால் பாலசந்தர் எதையும் கவனிக்காமல் தன் வேலையிலேயே முழு மூச்சுடன் ஈடுபட்டான்.

சிறிது நேரத்தில் துரைசாமிக்கு மூச்சு வந்தது, உடனே அவனை ஆம்புலன்ஸ் வண்டியில் ஏற்றி ஆஸ்பத்திரிக்கு அனுப்பினான் பாலசந்தர்.

"பரிமளா உன்னுடன் நான் சிறிது தனியாகப் பேசவேண்டும்" என்றான் பாலசந்தர்

ஜமீன்தாரிணி அதை ஆட்சேபித்த போதிலும் பரிமளாவின் கையைப பற்றி வெளியே அழைத்துச் சென்றான் பாலசந்தர்

"முன்பொரு சமயம் உனக்கு ஒரு பெட்டி நிறைய பிஸ்கெட் அனுப்பப் பட்டிருந்ததல்லவா? அதில் விஷம் கலந்திருந்தது. அதனால் தான் அன்றிரவு நான் அதை திருடிச்சென்றேன்"

"அவைகளை நீங்கள் அனுப்பவில்லையா?" என்று வியப்போடு கேட்டாள் பரிமளா.

"இல்லை நான் உனக்கு எந்த காலத்திலும் விஷம் கலந்த பிஸ்கெட்டுகளை அனுப்புவேன் என்று நினைக்கிறாயா என்று அழுத்திக்கேட்ட பாலசந்தர் அவளையே கூர்ந்து பார்த்தான்

அவன் தன்னைக் காதலிக்கிறான் என்று புரிந்து கொண்டாள் பரிமளா. அவள் முகம் வெட்கத்தால் சிவந்தது.

"இன்று உனக்குத்தான் ஏதோ ஆகி விட்டது என்று பதறி ஓடி வந்தேன். ஆனால் நல்லவேளை அது துரைசாமிக்குத் தான் ஏற்பட்டிருக்கிறது. உனக்கு ஏற்பட்டிருந்தால் இந்நேரம் நீ மேலுலகத்தை நோக்கி பிரயாணம் செய்து கொண்டிருப்பாய் அன்றொரு நாள் உன்மேல் இடித்து விடுவது மாதிரி ஒரு லாரி வந்தது அல்லவா? என்று கேட்டபடி அவளுடைய புடவையிலிருந்து லாரியோடு மாட்டிக் கொண்டு சென்ற ஒரு துணித் துண்டை எடுத்துக்காண்பித்தான். உனக்குஇம் மாதிரி அடுக்கடுக்கான தொல்லைகளைக் கொடுக்கும் எதிரியை கூடிய விரைவில் கண்டு அங்கிருந்து சென்று விடுவதுதான் நல்லது. என்று கூறிய பாலசந்தர் 'நீ போய் ராஜகண்ணுவை நான் வரச்சொன்னதாகக் கூறு என்றான்.

பரிமளா மாளிகையினுள் நுழைந்து ராஜகண்ணுவிடம் பாலசந்தர் அவரை அழைத்ததாகக் கூறினாள்.

பாலசந்தர் இருந்தஇடத்தை ராஜகண்ணு அடைந்தபொழுது அவனது மனம் சஞ்சலத்தில் ஆழ்ந்திருந்தது.

ராஜகண்ணு நீ மலேயாவில் செய்துவிட்டு வந்திருக்கும் வேலைக்கு உன்னே இப்பொழுதே என்னல் கைது செய்ய முடியும் உன்னல் பரிமளாவிற்கு ஏதாவது ஆபத்து நேர்ந்தால் உன் உடலில் எலும்பு கூட மிஞ்சாது என்று எச்சரித்த பாலசந்தர் அங்கிருந்து கிளம்பிஞர்

ராஜக் கண்ணு பிரமை தட்டிப்போய் நின்ருன். அவன் மனம் கதிகலங்கிப் போயிருந்தது.

அன்று மாலே ஜமீன்தாரிணி பரிமளாவை அழைத்தாள். நீ உன் மனக்கவலேகளே மறந்து எங்கேனும் சற்று நேரம் நிம்மதியாகப் போய் விட்டு வா, பரிமளா என்ருள்.

பரிமளாவும் அதற்கு ஒப்புக்கொண்டு தனது உற்றத் தோழியான நிர்மலாவை சந்திப்பதற்காக பாரிஸ்டர் சுந்தர வடிவேலின் ஜாகைக்குச் சென்ருள்.

அவளே இன்முகத்துடன் வரவேற்ற பாரிஸ்டர் அவளே மறுநாளிலிருந்து மீண்டும் தன்னிடம் வேலே பார்க்க வரவேண்டும் என்று கூறிவிட்டு அவளது பதிலுக்குக் கூட காத்திராமல் வெளியே கிளம்பிச் சென்று விட்டார்

நிர்மலாவை சந்தித்த போது இந்தத் தகவலேக் கூறிய பரிமளா நான் ஜமீன்தாரிணி

யிடம் நாளை காலை அங்கு வருவதாகக் கூறி இருக்கிறேன் ஆனால் நாளை காலை இங்கு வேலை செய்யும்படி கூறிவிட்டுப் போய்விட்டார் என்றாள்.

இன்றிரவே ஜமீன்தாரிணியிடம் தகவலைக் கூறிவிட்டு பரிமளா அப்படிச் செய்தாயானால் நீ நாளை காலை இங்கு வர உனக்கு அனுமதி கிடைக்கலாம் என்றாள் நிர்மலா

இருவரும் கருணாலயத்தின் ஜாகையை அடைந்தனர். அங்கு குளித்து உடை மாற்றிக் கொண்டு இருவரும் புறப்பட இரவு மணி பத்தாகி விட்டது.

எனக்கு இளைய ஜமீன்தார் பாலாஜியிடம் ஏதோ ஒருஈடுபாடு ஏற்பட்டிருக்கிறது" என்று வெட்கத்தோடு கூறினாள் நிர்மலா.

அதைக்கேட்டு சிரித்தாள் பரிமளா.

இருவரும் நடுங்கிக்கொண்டே மாளிகையை நோக்கிச் சென்றனர்.

பரிமளாவும், நிர்மலாவும் சோலைமலை மாளிகைக்குச் சென்று கொண்டிருக்கையில் ஒரு மனிதன் அவர்களைப் பின் தொடர்ந்து கொண்டே வந்தான்.

பல வீதிகளை அவர்கள் கடந்தபின், திடீ ரென்று எதிர்ப்புறமிருந்து பாலசந்தர் வரு வதைக் கண்டார்கள்.

பாலசந்தர் பரிமளாவிடம் தான் கொண் டிருந்த அக்கறையை விளக்கி "நீ இப்பொழுது அங்கு சென்றால் உனக்கு இன்னும் பல தொல் லைகள் தான் ஏற்படும். எனவே நீ திரும்பிச் சென்று கருணாலயத்தின் ஜாகையில் இன் றிரவு படுத்துக்கொள்" என்றான்.

ஆனால் பரிமளா பிடிவாதமாக முன்னேறி னாள்.

இதனால் ஆத்திரமடைந்த பாலசந்தர் இதுவரை அவர்களைப் பின் தொடர்ந்து வந்த ஆளை சைகை காட்டி அழைத்தான்.

அந்த நபர். கமிஷ்னர் ஆபீஸில் குற்ற விசாரணை இலாகா ஸப்- இன்ஸ்பெக்டர் கேச வன் தான்!

"துரைசாமியை கொலை செய்யத் திட்ட மிடப்பட்ட முயற்சியில் பரிமளாவிற்கும்சம்பந்த மிருக்கிறது!" என்று கேசவனைப் பார்த்துக் குற்றம் சாட்டும் தோரணையில் கூறினாள் பால சந்தர்:

உடனே கேசவன் பரிமளாவைக் கைது செய்து எழும்பூர் போலீஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்றார்,

இவற்றைப் பார்த்து செயலற்றுப்போய் நின்றாள் நிர்மலா.

# 11

காவேரி அன்று இரவு விடுதலை செய்யப் பட்டாள். வார்டர் அவளிடம் அவளுடைய மனிதர்கள் இரவு பத்துமணிக்கு வந்து அழைத்துச் செல்வதாகக் கூறி இருப்பதாகக் கூறினர்.

ஜெயிலர் கல்யாணசுந்தரம் சிறிது நேரத்தில் வந்து சேர்ந்தார். அவர்தான் காவேரியுடன் பேசிக்கொண்டிருந்தார்,

"பரிமளா முன்பொரு தடவை இங்கு வந்து உன்னைப் பற்றி ரொம்ப அக்கறையோடு விசாரித்தாள்" என்று கூறிய கல்யாணசுந்தரம், "நீ உண்மையிலேயே நிரபராதிதானா?" என்று கேட்டார்,

"இல்லை, நான் நிரபராதி இல்லை!" என்று உணர்ச்சியற்ற குரலில் கூறியகாவேரி, "ஆனல் என்னுல் என் கணவரைப் பற்றி எந்தவிதமான தகவலும் கூறமுடியாது" என்முள்,

"அன்று, கற்பகவல்லியிடம் கையெழுத்து வாங்க வந்தாளே ஒரு பெண்— அவள் பெயர் பரிமளா, அவள்தான் உன் மகள்!" என்றார் கல்யாணசுந்தரம்.

"அப்படியா!" என்று ஆச்சரியத்தோடு கேட்ட காவேரி, "அவள் எவ்வளவு அழகாக இருந்தாள்!" என்று பரவசத்தோடு கூறினாள்.

அந்தச் சமயத்தில் காவேரியை அழைத்துச் செல்வதற்காக கார் வந்து விட்டது என்று ஜெயில் காவலன் கூறினான்,

காவேரி விடைபெற்று காரில் ஏறிக் கொண்டாள் கார் கடும் வேகத்தில் பறந்தது.

ஃ ஃ ஃ

தனது ஜாகையை அடைந்த பாலசந்தர், சர்க்கார் கவரில் வரும் கடிதங்கள் எப்பொழுதும் ஒரு நாள் தாமதமாக வந்து சேர்வதைக் கண்டு பிடிக்க வேண்டுமென்ற முடிவோடு, காவற்காரனை அழைத்து விசாரித்தான்.

முதலில் காவல்காரன் எதுவும் கூறமறுத்த போதிலும், கடைசியில் யாரோ ஒருவர் இம் மாதிரி ஒரு நாள் தாமதப்படுத்துவதற்காக தினமும் இரண்டு ரூபாய் தருகிறார் என்று ஒப்புக் கொண்டான்.

அன்று பாலசந்தருக்கு வந்திருந்த கவரையும், தந்தியையும் எடுத்துக்கொடுத்தான்,

தந்தியைப் படித்த பாலசந்தரின் முகம் பயங்கரமாக மாறியது.

உடனே பாப்பாக்கம் மத்திய சிறைச் சாலைக்குச் சென்றனர். ஜெயிலரை விசாரித்ததில் யாரோ ஒரு பெரிய ஃபோர்டு காரில் அவனை அழைத்துச் சென்று விட்டதாகவும், அதை பாலசந்தர்தான் அனுப்பி வைத்தான் என்று தாம் நினைத்ததாகவும் கூறினார்.

அந்தக்கார் எந்தத் திசையில் சென்றது என்பதைக் கேட்டறிந்த பாலசந்தர் அந்தத் திசையில் தன் காரைச் செலுத்தினான்.

வழியில் ஒரு பெட்ரோல் பங்கில் இருந்த குமாஸ்தாவிடமிருந்து அவர்கள் மேற்கொண்டு சென்ற திசையைக் கேட்டறிந்து அதன்படி காரைச் செலுத்தினான். பிறகு ஒரு பீட் போலீஸ்காரரிடமிருந்து தொடர்ந்து சென்றான் பாலசந்தர்.

சிறிது தூரத்தில் ஒரு ரோடு நான்காகப் பிரிந்து சென்றது. கார் எந்த வழியாகச் சென்றதென்பதைப் புரிந்து கொள்ள முடியாமல் எழும்பூர் போலீஸ் ஸ்டேஷனுக்கு விரைந்து சென்றான்.

அங்கிருந்த போலீஸ் அதிகாரி ஜமீன்தாரிணி நேரில் வந்து உதவிக் கமிஷ்னரிடம் துரைசாமி [illegible] நேரத்தில் பரிமளா அங்கு இல்லை என்று எழுத்து மூலம் வாக்கு மூலம் கொடுத்து, அவனை விடுதலை செய்யுமாறு கூறிவிட்டுப் போய்விட்டாளென்றும்,

அதன்படி இரவு ஒரு மணிக்கு பரிமளா விடுதலை செய்யப்பட்டாளென்றும் அவளை ஒரு ஃபோர்ட் காரில் வந்த ஒரு மனிதர் அழைத்துச் சென்றதாகவும் கூறினார்.

நடந்தவற்றின் மூலகாரணம் ராஜகண்ணு தான் என்று அறிந்த பாலசந்தர் அவனைப் பிடிக்காமல் விடப் போவதில்லை என்று சங்கல்பம் செய்துகொண்டான்.

பரிமளாவை விடுதலை செய்துகொண்டு போன மனிதர், அவளை ஃபோர்ட் காரில் ஏற்றி தாமே காரை ஓட்டிச் சென்றார்.

பரிமளா தன் கண்களை மூடியபடியே அமர்ந்திருந்ததால் அவளுக்கு தூக்கம் தூக்கமாக வந்தது. அவளுக்கு, நன்னை யார் அழைத்துச்செல்கிறார்கள் என்ற விவரம் தெரியவில்லை.

திடீரென்று காரை ஓட்டிய அந்த மனிதன் பிரேக் போடவே பரிமளா முன்சீட்டில் மோதிக் கொண்டாள். அவள் தூக்கமும் கலைந்தது. காரை ஓட்டிச் செல்வது ராஜகண்ணுதான் என்று புரிந்துகொண்டாள்.

"பயப்படாதே, பரிமளா! அந்த பாலசந்தர் அநியாயமாக உன்மீது கொலைக்குற்றம் சாட்டி உன்னை ஜெயிலில் அடைத்து வைத்தான். அவன் கண்களில் நீ ஒரு இரண்டொரு தினங்களுக்குப் படாமல் இருப்பதே

நல்லது. அதனால் நீ ஜமீன்தாரணிக்குச் சொந்த மான ஒரு வீட்டில் சில நாட்கள் தங்கி இருந்து விட்டு செல்லக்கூடத் திரும்பலாம்'' என்றான்.

பரிமளாவும் அந்த ஏற்பாட்டுக்கு ஒப்புக் கொண்டாள்.

அவர்கள் ஒரு அகலமான குன்றின் சரிவில் வந்து அதன் அடிவாரத்திலுள்ள பள்ளத் தாக்கை அடைந்தனர். அங்கிருந்து ஒரு பெரிய தோப்பின் வழியாகச் சென்று சிறிது தூரத்தி லிருந்த ஒரு பழங்காலக் கட்டிடத்தின் அருகில் காரை நிறுத்தினான் ராஜகண்ணு.

"இது டாக்டர்மனோகருக்கு சொந்தமான வீடு" என்று கூறிய ராஜகண்ணு, "நீ நாளை காலை ஜமீன்தாரிணியின் வீட்டிற்குச் செல்ல லாம்!" என்றான்.

டாக்டர் மனோகர் குடிபோதையில் மயங் கிக் கிடந்தார். அவரது வேலைக்காரியான செல் லம்மாளை, பரிமளாவுக்கு ஒரு அறை ஏற்பாடு செய்யச் சொல்லிய ராஜகண்ணு அவளை அந்த அறைக்குக் கூட்டிச் சென்றான்.

பரிமளா அந்த அறைக்குள் நுழைந்ததும் கதவை வெளிப்புறமாகத் தாளிட்டு பூட்டினான் ராஜகண்ணு.

தான் அநியாயமாக இங்கு சிறைவைக்கப் பட்டு விட்டோம் என்று பரிமளா புரிந்து

கொண்டாள் பாலசுந்தரின் பேச்சை மீறிதான் இந்த ராஜசண்ணுவை நம்பியது எவ்வளவு கஷ்டத்தில் கொண்டு வந்து விட்டு விட்ட தென்று எண்ணி கலங்கினாள்.

# 12

நிர்மலாவிடம் இளைய ஜமீன்தாரான பாலாஜி காதல் கொண்டு அவளை அழைத்துக் கொண்டு சென்னையில் பல இடங்களுக்குச் சென்றான். சினிமாகளைப் பார்ப்பதும், பெரிய பெரிய ஹோட்டல்களில் விருந்து சாப்பிடுவ தும் அவர்களுக்கு வழக்கமாகி விட்டது.

அன்றைய தினமும் அவர்கள் ஒரு சினிமா வைப் பார்த்துவிட்டு, ஹோட்டலில் விருந் துண்டார்கள். ஹோட்டலை விட்டு வெளியே வந்ததும் பாலாஜிக்கு ஒரு யோசனை தோன் றியது.

"இங்கிருந்து சில மைல் தூரத்தில் சிங்கப் பட்டி என்று ஒரு கிராமம் இருக்கிறது. அங்கு

பலவிதமான இயற்கைக் காட்சிகள் இருக்கின் றன!" என்று கூறிய பாலாஜி, "அங்கு தான் டாக்டர் மனோகரின் வீடும் இருக்கிறது! என்றான்.

"அப்படியானால் நாம் அங்கே போகலாமா?" என்று ஆவலோடு கேட்டாள் நிர்மலா.

'சரி' என்ற பாவனையில் தலையாட்டிய பாலாஜி, அங்கு வந்து கொண்டிருந்த ஒரு வாடகைக் காரை நிறுத்தி அதில் அவளையும் ஏற்றி, தானும் ஏறிக் கொண்டு சிங்கிப் பட்டியை நோக்கிப் போகுமாறு கூறினான்.

"பரிமளா அப்படி திடீரென்று மறைந்து விட்டாள்?" என்று கேட்டாள் நிர்மலா.

"அவள் எங்கும் மறைந்து விடவில்லை. என் தாயார்தான் அவளை எங்கோ அனுப்பி வைத்திருக்கிறாள். ஒருவேளை அவள் சிங்கிப் பட்டியில் டாக்டர் மஹேசுரின் ஜாகையில். இருந்தாலும் இருக்கலாம்" என்றான் பாலாஜி

அந்தச் சமயத்தில் ஒரு கார் அவர்களின் வாடகைக் காரைத் தாண்டிச் சென்றது. அதில் ராஜகண்ணு அமர்ந்திருந்தான்.

"அடா! அதில் ராஜகண்ணுதான் போகிறான்" என்று வியப்புடன் கூறிய பாலாஜி, அவன் சிங்கிப்பட்டிக்குத்தான் செல்கிறான்— டிரைவர்! காரைச் சற்று வேகமாக ஓட்டு" என்று கட்டளை இட்டான்.

டாக்டர் மஹேசுரின் வீட்டிற்கு நூறுகெஜ தூரத்திலேயே வாடகைக் காரை நிறுத்தி இறங்கிக் கொண்டனர் இருவரும்.

வாடகைக்காரரை திருப்பி அனுப்பி விட்டு நடந்து டாக்டரின் கட்டிடத்தை நோக்கிச் சென்றனர்.

அவர்கள் கட்டிடத்தை நெருங்கும்போது ஒரு பெண் வீரிட்டலறும் சத்தம் கேட்டது. அந்தச் சமயத்தில் அங்கிருந்து ஒரு கார் வெளியே புறப்பட்டு வருவதைப் பார்த்து ஒரு மரத்தின் பின்னால் மறைந்துகொண்டனர்,

அந்தக் காருக்குள் ராஜகண்ணுவும் ஒரு பெண்ணும் இருந்தனர்.

கார் சிறிது தூரம் போய் நின்றது டாக்டர் மனேகர் ஓடிவந்து காரில் ஏறினார், கார் பாலாஜியும் நிர்மலாவும் ஒளிந்திருந்த மரத்தின் பக்கம் நின்றிருந்ததால் இருவரும் சாமான் வைக்கும் “டிக்கியில் பதுங்கிக்கொண் டனர்.

கார் சிறிது தூரம் சென்றதும் நின்றது. டாக்டர் மானேகர் ஓடிவந்து இறங்கிப்போய் ஒரு பொது டெலிபோன் பூத்திலிருந்து போன் செய்துவிட்டு வந்தார். இதை நிர்மலா கவனித்துவிட்டு மீண்டும் பதுங்கிக் கொண் டாள் அதே நேரத்தில் டாக்டரின் வீடு தீப் பற்றி எரிய ஆரம்பித்தது

கார் ஜமீன்தாரிணியின் பழைய எஸ் டேட்டை நோக்கி விரைந்தது. பாலாஜி அதைத் தெரிந்துகொண்டு நிர்மலாவிடம்

கூறவே இருவரும் கீழே குதித்து நடக்க ஆரம்பித்தனர்

மாளிகை வாசலில் காத்துக் கொண்டிருந்த ஜமீன்தாரிணி சாவித்திரிதேவி கிழக்கு வாசலுக்குக் காரைக் கொண்டு போகும்படி கூறிவிட்டு, ராஜகண்ணுவைப் பார்த்த உடன் அவன் சிங்கப் பட்டியில் என்ன செய்துகொண்டிருந்தான் என்று கேட்டாள்,

ராஜகண்ணு பிறகு அதைக் கூறுவதாகக் கூறியவுடன் கார் கிழக்கு வாசலை நோக்கிச் சென்றது.

டாக்டர் மனோகர் வழியில் இறங்கி டெலிபோன் செய்தது ஜமீன்தாரிணிக்குத்தான் என்று புரிந்து கொண்டாள் நிர்மலா.

ஜமீன்தாரிணி அப்பால் சென்றதும், இருவரும் கிழக்குப்பக்க வாசலுக்குச் சென்றனர். அந்தக் கதவு மூடப்பட்டிருந்தது. இளைய ஜமீன்தார் பாலாஜி தனது பையிலிருந்து ஒரு சாவியை எடுத்தான்.

எந்தவிதமான பூட்டையும் திறக்கக்கூடிய சாவி அது. அதன் உதவியால் ஒரு கதவைத் திறந்த பாலாஜி, நிர்மலாவைப் பின்னால் வரும்படிக் கூறினான்,

அங்கு ஒரு வராந்தா காணப்பட்டது. அதன் வழியாக நடந்து சென்ற இருவரும்

இடது புறமாகத் திரும்பி ஒரு கதவைத் திறந்துகொண்டு ஒரு படிக்கட்டின் உதவியோடு மேலே இருந்த பால்கனியை அடைந்தனர்.

"விருந்து மண்டபத்தில் நடக்கும் நிகழ்ச்சிகளை இந்த பால்கனியிலிருந்து பார்க்கலாம்!" என்று நிர்மலாவிடம் கூறிய பாலாஜி கீழே விருந்து மண்டபத்தைப் பார்த்தான்

கீழே, பரிமளாவின் தாயாரான காவேரி ஜமீன்தாரிணியின் முன்னால் நிறுத்தப்பட்டிருந்தாள். ஜமீன்தாரிணி அவளிடம், பரிமளாவை அழைத்துக்கொண்டு கடல் கடந்து மலேயாவுக்கு சென்று விடும்படியும், அவர்கள் செலவுக்கு வேண்டிய தொகையைத்தான் இங்கிருந்து அனுப்புவதாகவும் கூறினாள்.

காவேரி தனக்கு அப்படி செய்வதற்கு விருப்பமில்லை என்று தெரிவித்தாள்.

பிறகு, தனக்கு விளங்கிவிட்ட பல விஷயங்களைப் பற்றித் தங்கு தடையின்றி பேசிக்கொண்டே போனாள்.

அந்த விஷயங்களெல்லாம் ஜமீன்தாரிணிக்கும் அவளது நண்பர்களுக்கும் ஆபத்து விளைவிக்கக் கூடியனவாக இருந்தன. அதனால் ஜமீன்தாரிணி மீண்டும் தான் சொன்ன நிபந்தனைக்குக் கட்டுப்படும்படி வற்புறுத்தினாள்.

டாக்டர் மனோகர் அறிவுரை கூறியும் காவேரி அடங்கி முணங்கவில்லை. அதனால் ஆத்திரமடைந்த டாக்டர் மனோகர் காவேரியின் குரல் வளையைப் பிடித்து இறுக்கி நெரிக்க ஆரம்பித்தார்.

அந்தச் சமயத்தில் பால்கனியிலிருந்த இளைய ஜமீன்தார் பாலாஜி பாய்ந்து கீழே நின்ற டாக்டரின் மேல் போய் விழுந்து அவரது கழுத்தைத் தன் கால்களில் இறுக்கினான்.

மூச்சுத்திணறிய டாக்டர் மனோகர் காவேரியின் குரல் வளையிலிருந்த தன் பிடியை நழுவ விட்டார்.

அந்த மாளிகையின் ஒரு மூலையில் தொங்கிக் கொண்டிருந்த கண்டாமணியைப் பிடித்து இழுத்து டாண் டாண் என்று அடிக்கத் தொடங்கினான் பாலாஜி.

“மணியின் ஓசை கேட்டு குடிமக்கள் எல்லோரும் இங்கு வருவார்கள். அவர்களிடம் இங்கு நடந்தவைகளைக் கூறி உன்னை போலீஸில் ஒப்படைக்கப் போகிறேன்!”

“டாக்டர் இவனைப் பிடித்து அந்த அறையில் அடைத்து வையுங்கள்” என்று கத்திய ஜமீன்தாரிணி சாவித்திரிதேவி, “குடிமக்களிடம் நான் போய் அவர்களை அனுப்பி விடுகிறேன்” என்றாள்.

அந்தச் சமயத்தில் பால்கனியிலிருந்த நிர்மலா. "ஜமீன்தாரிணி அம்மாவே! நான் நிச்சயம் இங்கு வரும் குடிமக்களிடம் உண்மையைக் கூறப் போகிறேன். அதோடு யாராவது பாலாஜியின் மீது கையை வைத்தால் நான் சும்மா விடப் போவதில்லை!" என்று கர்ஜித்தாள்.

ஜமீன்தாரிணிக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. பிறகு ஒரு முடிவுக்கு வந்தவளாய் "பாலாஜி! நீ நிர்மலாவையும் காவேரியையும் அழைத்துக்கொண்டு புறப்படு! நாளை காலை உன்னை வந்து மாளிகையில் விசாரித்துக் கொள்கிறேன்" என்றாள்.

பாலாஜி, நிர்மலாவையும், காவேரியையும் அழைத்துக்கொண்டு கருணாலயத்தின் வீட்டை நோக்கி காரைச் செலுத்தினான்.

COMICS PDF TIMES

# 13

போகும் வழியில் பாலசந்தருக்கு டெலிபோன் செய்த நிர்மலா, டாக்டரின் சிங்கப்பட்டி பங்களா தீப்பிடித்து எரிவதாகவும், பரிமளாவைப் பற்றி எந்தவிதத் தகவலும் இல்லை என்றும் கூறினாள்.

அந்த விலாசத்தைத் தெரிந்து கொண்ட பாலசந்தர் தனது காரை விரைவாக செலுத்தியபடி [illegible]பட்டியை நோக்கிச் சென்றான்

பாலசந்தர் அந்த வீட்டை நெருங்கியபோது அங்கு தீ நன்றாக கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்தது. தனது காருக்குத் திரும்ப நினைத்த பாலசந்தர் ஒரு விநாடி ஏதோ யோசனை செய்தவனாக மீண்டும் பங்களாவின் அருகில் வந்தான்.

அந்தச் சமயத்தில் யாரோ கதவைப் படபடவென்று தட்டும் சத்தம் கேட்டது. வியப்போடு அந்தக் கட்டிடத்திற்குள் நுழைந்தான் பாலசந்தர்.

"யார் அது?" என்று தனது முழு பலத்தையும் திரட்டிக் கத்தினான் பாலசந்தர்.

"கதவைத் திறங்கள்!" என்று ஒரு பெண் குரல் கிறீச்சிட்டது அது... பரிமளாவின் குரல் தான்!

"பரிமளா!" என்று ஆச்சரியத்தோடு கூச்சலிட்ட பாலசந்தர் வேகமாக மாடியை நோக்கி ஓடினான்.

நெருப்பின் நாக்குகளெல்லாம் பற்றி எரிந்து கொண்டிருந்தன. [illegible] புகை மண்டலமாக இருந்தது. [illegible] [illegible] கருமாறி மேகமாக

மாடியை அடைந்த பாலசந்தர் அங்கு ஓட்டம் பட்டிருந்த ஒரு அறையை நோக்கி ஓடினான்.

அந்தப் பூட்டிலேயே சாவியும் இருந்ததால் அவனால் சீக்கிரம் அதைத் திறக்க முடிந்தது.

உள்ளே இருந்த பரிமளாவை அழைத்துக் கொண்டு அந்தக் கட்டிடத்தை விட்டு வெளியே வருவதற்குள் பாலசந்தரின் சட்டையில் பெரும்பகுதி தீயில் கருகி விட்டது அவன் உடலிலும் சிலஇடங்களில் தீக்காயம் லற்பட்டது.

தனது காரில் பரிமளாவை ஏற்றிக் கொண்ட பாலசந்தர் அவளிடம் நடந்தவைகளையெல்லாம் கேட்டுத் தெரிந்து கொண்டான்.

"அம்மாவை அவர்கள் எங்கே அழைத்துச் சென்றார்களோ தெரியவில்லை பாலசந்தர்!" மன்று கூறிய பரிமளாவின் கண்களில் கண்ணீர் துளிர்த்தது

"கவலைப்படாதே, பரிமளா! உன்னை உன் வீட்டில் விட்டு விட்டு நான் அவர்களைத்தேடிப் பிடிக்கப் போகிறேன்" என்றான் பாலசந்தர்.

அவர்கள் கருணாலயத்தின் வீட்டை அடைந்த பொழுது இளைய ஜமீன்தார் பாலா

ஜியும், நிர்மலாவும். காவேரியும் அங்கிருப் பதைக் கண்டு ஆச்சரியமுற்றனர்!

தனது தாயார் அங்கே இருப்பதைக் கண்ட பரிமளா ஓடிச்சென்று தன் தாயரி ரைக் கட்டி அணைத்துக் கொண்டாள்.

பாலசந்தர் பாரிஸ்டர் சுந்தரவடிவேலுக்கு டெலிபோன் செய்து விவரங்களைக் கூறியதும், அவர்தான் அங்கு புறப்பட்டு வருவதாகக் கூறினார்.

# 14

ஜமீன்தாரிணி சாவித்திரிதேவி தனது திட்டங்கள் தோல்வி அடைந்ததற்காக வருந் தவில்லை. ஆனால் தனக்கு எதிராக பாலசந்த ருக்கு பக்க பலமாக நின்று அதி சாதுர்யமாக வேலைகளைச் செய்து வரும் மர்ம மனிதன் யார் என்று தெரிந்து கொள்ளவும், தனது திட்டங் கள் தோல்வி அடையக் காரணமாக இருந்த வர்களை பழி தீர்க்க வேண்டும் என்றும் வெகு வாக ஆவல்பட்டாள்.

சுவற்றில் ஒரு படத்தின் மறைவில் ஒரு சிறிய இரும்புப்பெட்டி மறைக்கப் பட்டிருந்

தது. அதைத்திறந்து அதிலிருந்து ஒரு சாவியை யும், மடித்து வைக்கப்பட்டிருந்த ஒரு கடிதத் தையும் எடுத்துத் தன் கைப்பையில் வைத்துக் கொண்டு தனது காரில் ஏறி கருணாலயத்தின் பங்களாவில் இருந்த பரிமளாவின் ஜாகையை நோக்கி விரைந்தான்.

அங்கு அவனைக் கண்டு அனைவரும் ஆச்சரி யமடைந்தனர். அவளோ, ஜன்னல் அருகில் அமர்ந்திருந்த பாரிஸ்டர் சுந்தர் வடிவேலைக் கண்டு திடுக்கிட்டாள்.

பாலசந்தருக்குப் பக்க பலமாக இருந்த மர்ம மனிதர் அவர் தான் என்று தெரிந்து கொண்டாள், தன்னை ஜமீன்தார் முத்துராம லிங்கம் மணக்கக் கூடாது என்று பாரிஸ்டர் தடுத்தும் அவள் நினைவிற்கு வந்தன.

பாரிஸ்டர் சுந்தரவடிவேல் அவளையே சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்தார். "நான் பழைய கதையைக் கூறப் போகிறேன், ஜமீன்தாரிணி அம்மா! உங்களுக்கு ஒன்றும் ஆட்சேபனை இல்லையே?" என்று கேட்டார்,

"இல்லை"

முன் நாள் ஜமீன்தாரான முத்துராமலிங் கம் இருமுறை மணம் செய்து கொண்டார். ராஜவேல் முதலாவது மனைவியின் மகன் தான். இரண்டாவது மனைவியான சாவித்திரி

தேவியின் மகன் தான் பாலாஜி ராஜவேல் காவேரியின் பொறுமைகண்டு அவளைக் காதல் மணம் செய்து கொண்டான்.

"ஆனால் தான் ஒரு ஜமீன்தார் என்று கூறாமல் ஒரு மளிகைக்கார வீட்டுப் பிள்ளை என்று கூறிக் கொண்டு வேறு ஒரு பெயரில் அவளைப் பதிவு திருமணம் செய்துக் கொண்டான்.

"ஒரு மாதத்திற்குள் ஜமீன்தாரி முத்துராமலிங்கத்திற்கு உடல் நிலை சரியில்லை என்ற தகவல் வரவே, காவேரிக்குத் தெரியாமல் சோலைமலைக்குச் சென்றுவிட்டான். ஆனால் சென்ற இரண்டே வாரத்தில் டைபாயிட் ஜுரத்திற்கு பலியாகி விட்டான்.

"இறப்பதற்கு முன் தனது சிற்றன்னையாகிய சாவித்திரிதேவியிடம் தனக்கு திருமணம் நடந்தக் கதையைக் கூறி காவேரியை சோலைமலை மாளிகைக்குக் கூட்டி வருமாறு கெஞ்சினான்.

"காவேரியை அழைத்து வந்து அவள் அறியாத உரிமைகளை அவளுக்குக் காட்டிக்கொடுக்க கூடாது என்று தீர்மானித்த சாவித்திரிதேவி அவளுக்குத் தகவலே அனுப்பவில்லை. இதற்கிடையில் ராஜவேல் இறந்து விட்டான்.

"ஜமீன் பதவியை ஏற்க வேண்டிய ராஜவேல் இறந்து விட்டதால் அவனது மனைவியான காவேரிக்கே ஜமீன் உரிமை போய்ச் சேருமென்பதை அறிந்த சாவித்திரிதேவி எப்படியாவது அவளை தீர்த்து விடவேண்டுமென்ற எண்ணத்துடன் அவளைத் தேடிப்புறப்பட்டாள். அவள்

சத்திரத்திலுள் நுழைந்ததும்தான் அதன் சொந்தக்காரியான விஜயகுமாரி தற்கொலை செய்துகொண்டு தன் கைப்பட ஒரு கடிதமும் எழுதி வைத்துவிட்டு இறந்திருந்தாள் சாவ தற்கு முன் தனது நகைகளையெல்லாம் அவள் அள்ளிப் போட்டு ஆசைதீர அணிந்திருக்கிறாள்

"இதைப் பார்த்ததும் சாவித்திரிதேவிக்கு ஒரு யோசனை தோன்றியது. காவேரியின் அறை வாசலில் மாட்டி இருந்த ராஜவேலின் போட்டோ அது காவேரியின் அறை என்பதை காட்டியது. விஜயகுமாரியின் கடிதத்தை எடுத்துக்கொண்டு, சில நகைகளையும் எடுத்துக் கொண்டு காவேரியின் அறையை அடைந்த சாவித்திரிதேவி நகைகளை காவேரியின் பெட்டியில் வைத்துப் பூட்டிவிட்டு சாவியையும் கடிதத்தையும் தன்னுடன் எடுத்துச் சென்று விட்டாள்.

"அவள் எதிர்பார்த்தபடியே காவேரி கைது செய்யப்பட்டு தண்டனையும் பெற்றாள். கடைசியில்தான் ஜமீன்தாரிணிக்கு பரிமளா தான் காவேரியின் பெண் என்ற உண்மை தெரிந்தது. அதனால் அவளைத் தன் காரியதரி சினியாக நியமித்து அவளுடைய தந்தையின் போட்டோவை அவளது பீரோவில் வைத்து, பரிமளாவினால் அடையாளம் கண்டுகொள்ள முடிகிறதா என்று பார்த்திருக்கிறாள்

"நான் அந்த ஜமீன்தார் பரம்பரையின் குடும்ப வக்கீலானதால், பாலசுந்தர் என்ற தலை சிறந்த துப்பறிவாளனையும் அமர்த்தினேன். அதோடுபோலீஸ் சப்இன்ஸ்பெக்டரான துரை

சாவியை ஜமீந்தாரிணி என்று பொய் சாட்டி பிடித்துக் கொடுத்து சமயற்காரனுக சோலைமலை மாளிகைக்கு அனுப்பினேன். அவரும் சமயற்காரனாகப் போய் நடந்த பல விஷயங்களைக் கண்டுபிடித்துக் கொண்டு வந்தார். ஆனால் அவர் எவ்வளவோ முயற்சி செய்தும் விஜயகுமாரியின் வயிரத்தை மட்டும் கைப்பற்ற முடியவில்லை!" என்று கூறி நிறுத்தினர்.

"இதோ இருக்கிறது அந்தக் கடிதமும் காவேரியின் பொய்ச் சாவியும்" என்று வெறுப்போடு கூறியபடி அவற்றை பாரிஸ்டரிடம் வீசி எறிந்தாள் சாவித்திரிதேவி.

"என் வாழ்வின் மகிழ்ச்சியைக் கெடுத்த என் மகனையும் பரிமளாவையும் நான் உயிருடன் விட்டு வைக்கப் போவதில்லை" என்று கூறியபடி தன் மடியிலிருந்து ஒரு துப்பாக்கியை உருவி எடுத்த சாவித்திரிதேவி அவர்களை நோக்கி துப்பாக்கியை உயர்த்தினுள் தனது உயிரைக் காத்த பாலாஜியின் முன் பாய்ந்து அவனை மறைத்து நின்று கொண்டாள் காவேரி

அந்தச் சமயத்தில் சமயற்கட்டிலிருந்து காபி கோப்பைகளை எடுத்துக்கொண்டு வந்த கருப்பையன் ஜமீன்தாரிணியைப் பார்த்து வியப்போடு, "ஆ! சுகுமாரி!" என்று கூவினுன்.

ஜமீன்தாரிணி அவனைக் கண்ட அதிர்ச்சியில் தடுமாறினுள். அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்ட பாலசந்தர் அவள் கையிலிருந்த துப்பாக்கியைப் பிடுங்க முயற்சித்தான்.

துப்பாக்கி வெடித்தது! குண்டு கருணாலயத்தின் மீது பாய்ந்தது. கருணாலயம் கீழே விழுந்தான்.

"ஜமீன்தாரிணி சாவித்திரிதேவிதான் அந்தக்காலத்து பிரபலமான நாடக நடிகையான சுகுமாரி" என்று கூறிய பாரிஸ்டர், 'நாடகம் பார்க்க வந்திருந்த ஜமீன்தார் முத்து ராமலிங்கம் அதன் அழகில் மயங்கி அவளைத் திருமணம் செய்து கொண்டார்!" என்றார்.

தனது ஆன்மாவையே அடிமைகொண்ட கீதமாகிய "பிருந்தாவனத்தில் கண்ணன் வளர்ந்த அந்த நாளும் வந்திடாதோ என்ற பாடலைப் பாடும்படி கருணாலயம் கூறவே ஜமீன் தாரிணி தன் இனிமையான குரலில் அதைப் பாடினாள்.

தனது கடைசிக் காணிக்கையாகத் தன் கையிலிருந்த வைரமோதிரத்தை அவளிடம் கொடுத்த கருணாலயம் உயிர் துறந்தான்,

அவனது உண்மை காதலினால் உள்ளம் உருகிய சுகுமாரி அந்த வைரத்தை உண்டு தானும் இறந்தாள்,

ஜமீன் பொறுப்புகளை ஏற்றுக்கொண்டதும் முதல் வேலையாக காவேரி செய்த காரியம் பரிமளாவுக்கும் பாலசந்தருக்கும் பாலாஜிக்கும் நிர்மலாவுக்கும் திருமணம் செய்ததுதான்!

திருமணத்தின்போது "பிருந்தாவனத்தில் கண்ணன் வளர்ந்த அந்த நாளும் வந்திடாதோ" என்ற பாடல்தான் மணமக்களால் வற்புறுத்தப்பட்டு மீண்டும் மீண்டும் பாடப் பட்டது.



COMICS
PDF
TIMES